# கிறிஸ்தவ நாகரிகம்

## பாட இலக்கம் 49

### கிறிஸ்தவ நாகரிகம் I

பலவினுள் தெரிவு 50 வினாக்களைக் கொண்டுள்ளது. 50 வினாக்களும் முழுப்பாடத் திட்டத்தையும் உள்ளடக்கியுள்ளது. மாணவர்கள் முழுப்பாடத் திட்டத்தையும் பாடப்பரப்பையும் அறிந்துள்ளனர் என்பதை அறிவதற்கு இது உதவியாக அமையும்.

**புள்ளி வழங்கப்படும் விதம்**

| | |
|---|---|
| பலவினுள் தெரிவு வினாக்கள் | - 50 |
| வழங்கப்படும் புள்ளிகள் | - 02 |
| மொத்தம் | - 02 x 50 = 100 |

# கிறிஸ்தவ நாகரிகம் II

## பகுதி - 1

| | | |
|---|---|---|
| வினாக்களின் எண்ணிக்கை | - | 03 |
| விடையளிக்க வேண்டிய வினாக்கள் | - | 02 |
| ஒரு வினாவுக்கான புள்ளிகள் | - | 20 |
| ஒரு வினாவிலுள்ள ஒரு பிரிவுக்கான புள்ளிகள் | - | 04 |
| ஒரு வினாவிலுள்ள மொத்தப் பிரிவுகள் | - | 05 |
| எனவே ஒரு வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் | - | 1 x 4 x 5 = 20 |
| எனவே பகுதி 1 இரண்டு வினாக்களுக்குமான புள்ளிகள் | - | 2 x 20 = 40 |

## பகுதி - 11

| | | |
|---|---|---|
| வினாக்களின் எண்ணிக்கை | - | 05 |
| விடையளிக்க வேண்டிய வினாக்கள் | - | 03 |
| ஒரு வினாவுக்கான புள்ளிகள் | - | 20 |
| ஒரு வினாவிலுள்ள ஒரு பிரிவுக்கான புள்ளிகள் | - | 05 |
| ஒரு வினாவிலுள்ள மொத்தப் பிரிவுகள் | - | 04 |
| எனவே ஒரு வினாவுக்கான மொத்தப் புள்ளிகள் | - | 1 x 5 x 4 = 20 |
| எனவே பகுதி 11 மூன்று வினாக்களுக்குமான புள்ளிகள் | - | 3 x 20 = 60 |

## இறுதிப் புள்ளி வழங்கல் முறை

| | | |
|---|---|---|
| கிறிஸ்தவ நாகரிகம் 1 | - | 100 புள்ளிகள் |
| கிறிஸ்தவ நாகரிகம் 11 | - | 100 புள்ளிகள் |
| இறுதிப் புள்ளி | - | 200 ÷ 2 = 100 |

## விடைத்தாள்களுக்குப் புள்ளியிடல் - பொது நுட்ப முறைகள்

விடைத்தாள்களுக்குப் புள்ளியிடும் போதும், புள்ளிப்பட்டியலில் புள்ளிகளைப் பதியும் போதும் ஓர் அங்கீகரிக்கப்பட்ட முறையைக் கடைப்பிடித்தல் கட்டாயமானதாகும். அதன்பொருட்டு பின்வரும் முறையில் செயற்படவும்.

1. விடைத்தாள்களுக்குப் புள்ளியிடுவதற்கு சிவப்பு நிற குமிழ்முனை பேனாவை பயன்படுத்தவும்.
2. சகல விடைத்தாள்களினதும் முதற்பக்கத்தில் உதவிப் பரீட்சகரின் குறியீட்டெண்ணைக் குறிப்பிடவும். இலக்கங்கள் எழுதும்போது **தெளிவான இலக்கத்தில்** எழுதவும்.
3. இலக்கங்களை எழுதும்போது பிழைகள் ஏற்பட்டால் அவற்றைத் தனிக்கோட்டினால் கீறிவிட்டு, மீண்டும் பக்கத்தில் சரியாக எழுதி, சிற்றொப்பத்தை இடவும்.
4. ஒவ்வொரு வினாவினதும் உபபகுதிகளின் விடைகளுக்காக பெற்றுக்கொண்ட புள்ளியை பதியும் போது அந்த வினாப்பகுதிகளின் இறுதியில் △ இன் உள் பதியவும். இறுதிப் புள்ளியை வினா இலக்கத்துடன் ☐ இன் உள் பின்னமாகப் பதியவும். புள்ளிகளைப் பதிவதற்கு பரீட்சகர்களுக்காக ஒதுக்கப்பட்ட நிரலை உபயோகிக்கவும்.

**உதாரணம் - வினா இல 03**

(i) .................................................................... ✓ 4/5

.................................................................................

.................................................................................

(ii) .................................................................... ✓ 3/5

.................................................................................

.................................................................................

(iii) .................................................................... ✓ 3/5

.................................................................................

.................................................................................

(03) (i) $\frac{4}{5}$ + (ii) $\frac{3}{5}$ + (iii) $\frac{3}{5}$ = $\boxed{\frac{10}{15}}$

**பல்தேர்வு விடைத்தாள் (துளைத்தாள்)**

1. க.பொ.த.(உ. தர) மற்றும் தகவல் தொழிநுட்பப் பரீட்சைக்கான துளைத்தாள் திணைக்களத்தால் வழங்கப்படும். சரியாக துளையிடபட்டு அத்தாட்சிப்படுத்திய துளைத்தாள் தங்களுக்கு கிடைக்கப்பெறும். அத்தாட்சிப்படுத்திய துளைத்தாளைப் பயன்படுத்துவது பரீட்சகரின் கடமையாகும்.
2. அதன் பின்னர் விடைத்தாளை நன்கு பரிசீலித்துப் பார்க்கவும். ஏதாவது வினாவுக்கு, ஒரு விடைக்கும் அதிகமாக குறியிட்டிருந்தாலோ, ஒரு விடைக்காவது குறியிடப்படாமலிருந்தாலோ தெரிவுகளை வெட்டிவிடக்கூடியதாக கோடொன்றைக் கீறவும். சில வேளைகளில் பரீட்சார்த்தி முன்னர் குறிப்பிட்ட விடையை அழித்துவிட்டு வேறு விடைக்குக் குறியிட்டிருக்க முடியும். அவ்வாறு அழித்துள்ள போது நன்கு அழிக்காது விட்டிருந்தால், அவ்வாறு அழிக்கப்பட்ட தெரிவின் மீதும் கோடிடவும்.
3. துளைத்தாளை விடைத்தாளின் மீது சரியாக வைக்கவும். சரியான விடையை ✓ அடையாளத்தாலும் பிழையான விடையை O அடையாளத்தாலும் இறுதி நிரலில் அடையாளமிடவும். சரியான விடைகளின் எண்ணிக்கையை அவ்வவ் தெரிவுகளின் இறுதி நிரையின் கீழ் அத்துடன் அவற்றை கூட்டி சரியான புள்ளியை உரிய கட்டத்தில் எழுதவும்.

**கட்டமைப்பு கட்டுரை விடைத்தாள்கள்**

1. பரீட்சார்த்திகளால் விடைத்தாளில் வெறுமையாக விடப்பட்டுள்ள இடங்களையும், பக்கங்களையும் குறுக்குக் கோடிட்டு வெட்டிவிடவும். பிழையான பொருத்தமற்ற விடைகளுக்குக் கீழ் கோடிடவும். புள்ளி வழங்கக்கூடிய இடங்களில் ✓ அடையாளமிட்டு அதனைக் காட்டவும்.
2. புள்ளிகளை ஓவலண்ட் கடதாசியின் இடது பக்கத்தில் குறிக்கவும்.
3. சகல வினாக்களுக்கும் கொடுத்த முழுப் புள்ளியை விடைத்தாளின் முன் பக்கத்திலுள்ள பொருத்தமான பெட்டியினுள் வினா இலக்கத்திற்கு நேராக 2 இலக்கங்களில் பதியவும். வினாத்தாளில் உள்ள அறிவுறுத்தலின் படி வினாக்கள் தெரிவு செய்யப்படல் வேண்டும். எல்லா வினாக்களினதும் புள்ளிகளும் முதல் பக்கத்தில் பதியப்பட்ட பின் விடைத்தாளில் மேலதிகமாக எழுதப்பட்டிருக்கும் விடைகளின் புள்ளிகளில் குறைவான புள்ளிகளை வெட்டி விடவும்.
4. மொத்த புள்ளிகளை கவனமாக கூட்டி முன் பக்கத்தில் உரிய கூட்டில் பதியவும். விடைத்தாளில் வழங்கப்பட்டுள்ள விடைகளுக்கான புள்ளியை மீண்டும் பரிசீலித்த பின் முன்னால் பதியவும். ஒவ்வொரு வினாக்களுக்கும் வழங்கப்படும் புள்ளிகளை உரிய விதத்தில் எழுதுவும்.

## புள்ளிப்பட்டியல் தயாரித்தல்

இம்முறை சகல பாடங்களுக்குமான இறுதிப்புள்ளி குழுவினுள் கணிப்பிடப்படமாட்டாது. இது தவிர ஒவ்வொரு வினாப் பத்திரத்துக்குமான இறுதிப்புள்ளி தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதியப்பட வேண்டும். வினாப்பத்திரம் I இற்குரிய புள்ளிப்பட்டியலில் "வினாப்பத்திரம் I" என்ற நிரலில் பதிந்து எழுத்திலும் எழுத வேண்டும். பகுதிப்புள்ளிகளை உள்ளடக்கி "வினாப்பத்திரம் II" எனும் நிரலில் வினாப்பத்திரம் II இற்குரிய இறுதிப்புள்ளியை பதிய வேண்டும். 51 சித்திரப் பாடத்திற்குரிய I, II, மற்றும் III ஆம் வினாப்பத்திரங்களுக்குரிய புள்ளிகளை தனித்தனியாக புள்ளிப்பட்டியலில் பதிந்து எழுத்திலும் எழுதுதல் வேண்டும்.

ooo

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

06.08.2018 / 0830 - 1030

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය I
கிறிஸ்தவ நாகரிகம் I
Christian Civilization I

**49 T I**

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

**1.** சமாரியா அமைந்துள்ள இடம்
(1) கரையோரச் சமதரையாகும். (2) மேற்கு மலைப்பகுதியாகும்.
(3) கிழக்கு மலைப்பகுதியாகும். (4) செங்குத்துப் பள்ளத்தாக்காகும்.
(5) யூதேயாப் பாலைவனமாகும்.

**2.** 'நெகேப்' என்பதன் பொருள் யாது ?
(1) வடக்கு (2) மத்தி (நடுவம்) (3) கிழக்கு (4) மேற்கு (5) தெற்கு

**3.** பின்வருவோருள் இஸ்ரயேலின் தென் அரசை ஆட்சிசெய்த அரசன் யார் ?
(1) தாவீது (2) சாலமோன் (3) ரெகபெயாம்
(4) சவுல் (5) எரொபவாம்

**4.** இறைவாக்கினர்களான எலியா, எலிசா ஆகியோர் எங்கு போதித்தார்கள் ?
(1) வட அரசில் (2) கலிலேயாவில்
(3) யூதேயா பாலைவனத்தில் (4) தென் அரசில்
(5) சிரியாவில்

**5.** பபிலோனியரின் அடிமைத்தனத்திலிருந்து யூதர்களை விடுவித்த அரசர் யார் ?
(1) தாரியூஸ் (2) சைரூஸ் (3) நெபுகற்நேசர்
(4) செதேக்கியா (5) நெகேமியா

**6.** கி.மு. 722 இல் வட அரசு மீது படையெடுத்தவர்கள்
(1) எகிப்தியர்கள் (2) சிரிய நாட்டினர் (3) அசீரியர்கள்
(4) பபிலோனியர்கள் (5) பாரசீகர்கள்

**7.** கிழக்காசியாவில் ஸ்பானியர்களின் ஆட்சிக்குட்பட்ட நாடு
(1) பிலிப்பைன்ஸ் (2) சீனா (3) கொரியா (4) ஜப்பான் (5) தாய்வான்

**8.** விஞ்ஞானி ஐசாக் நியூட்டன் தொடர்பில் **பிழையான** கூற்றைத் தெரிவுசெய்க.
(1) இவர் ஓர் இறையியலாளராவார்.
(2) இவர் விஞ்ஞானம், விவிலியம் பற்றிய நூல்களை எழுதினார்.
(3) இவர் விசுவாசம் பற்றிய பிரச்சினையை எதிர்நோக்கினார்.
(4) இவர் மருத்துவத் துறைக் கண்டுபிடிப்புகளுக்கான நோபல் பரிசு பெற்றார்.
(5) இவர் கடலின் ஏற்றம், இறக்கம் பற்றிய கருத்தினை முன்வைத்தார்.

**9.** 'கோதிக்' என்பதன் பொருள் யாது ?
(1) வான் நோக்கிய கூரான முகப்பைக் கொண்டது.
(2) அதிகளவான தூண்களைக் கொண்ட கட்டடம்.
(3) வர்ணக் கண்ணாடிகளால் அலங்கரிக்கப்பட்டது.
(4) சிற்பங்களால் அழகு செய்யப்பட்டது.
(5) மிலேச்சமானதும் பொருத்தமற்றதும்.

**10.** தாம் முன்வைத்த இறையியல் கருத்துகளுக்காகத் திருச்சபையின் கண்டனத்தை எதிர்கொண்டவர்
(1) அல்பேட் அயின்ஸ்டைன் (2) சேர். ஐசாக் நியூட்டன்
(3) அருட்பணி ரெயர்ட் டே சாடெய்ன் (4) அலெக்ஸ்சாண்டர் கிரஹம்பெல்
(5) அலெக்ஸ்சாண்டர் பிலெமின்

**11.** இலங்கையில் காணப்படும் 'ஐகோன்' சித்திரத்திற்குச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளத்தக்கது
(1) மருதமடு அன்னையின் சித்திரம் (2) இலங்கை மாதா சித்திரம்
(3) சதாசகாய மாதா சித்திரம் (4) லூர்து மாதா சித்திரம்
(5) பற்றிமா மாதா சித்திரம்

**12.** 16 ஆம் நூற்றாண்டு வரையிலும் சுயாதீனக் கலையாகக் **கருதப்படாத** கலை
(1) இசைக் கலை (2) சித்திரக் கலை
(3) அவைக்காற்றுக் கலை (4) கட்டடக் கலை
(5) சிற்பக் கலை

**13.** சக்தி மாற்றக் கோட்பாடு தொடர்பாகக் கருத்துரைத்த விஞ்ஞானி
(1) சாள்ஸ் டார்வின் (2) சேர். ஐசாக் நியூட்டன்
(3) அருட்பணி ரெயர்ட் டே சாடெய்ன் (4) அல்பேட் அயின்ஸ்டைன்
(5) ஆர்கிமிடிஸ்

**14.** பபிலோனிய அடிமைத்தனத்திலிருந்து மீண்டும் எருசலேம் வந்த தாவீது மரபு இளவரசன்
(1) எஸ்ரா (2) நெகேமியா (3) யோசியா (4) செருபாபேல் (5) சக்கரியா

**15.** நெஸ்ரோரிய பேதகம் பற்றிய சரியான கூற்று யாது ?
(1) கிறிஸ்துவில் தெய்வீக இயல்பு இல்லை.
(2) மரியாள் இறைவனின் தாயல்ல.
(3) கிறிஸ்துவில் இரண்டு வேறுபட்ட இயல்புகள் காணப்படுகின்றன.
(4) கிறிஸ்துவுக்குத் தோற்றப்பாடுடைய உடல் மாத்திரமே உண்டு.
(5) இயேசு, தந்தையாகிய இறைவனால் படைக்கப்பட்ட மகனாவார்.

**16.** மனிக்கேயத்தினுள் **உள்ளடக்கப்படாத** கூற்று,
(1) ஒளி, இருள் என இரு அரசுகள் உள்ளன.
(2) ஒளியின் அரசு கடவுளுக்குரியது.
(3) இருளின் அரசு சாத்தானுக்குரியது.
(4) ஒளி, இருள் ஆகிய இரண்டு சக்திகள் நித்தியத்திற்கும் நிலைத்திருக்கும்.
(5) ஆதாம் சாத்தானால் படைக்கப்பட்டான்.

**17.** ஸ்லாவ்வு நாடுகளில் முதலில் கிறிஸ்தவத்தை அறிவித்தவர்/அறிவித்தவர்கள்
(1) புனித சிறில், புனித மெத்தோடியஸ் ஆகியோராவர்.
(2) அய்டன் எனும் துறவியாவார்.
(3) ஸ்கொட்லாந்தின் திருத்தூதரான புனித கொலம்பான் ஆவார்.
(4) ஸ்காந்திநேவிய துறவியான புனித ஆன்ஸ்கா ஆவார்.
(5) புனித பொனிபாஸ் ஆவார்.

**18.** "அயர்லாந்து நாட்டில் திருச்சபை விரைவாகப் பரவலடைவதற்கு அயர்லாந்து மக்கள் முன்வர வேண்டும்" எனக் குறிப்பிட்டவர்
(1) புனித பாப்பிதை பெரிய கிரகோரியார் (2) புனித கொலம்பான்
(3) புனித கண்டபரி அகுஸ்தீன் (4) புனித பற்றிக் (பத்திரிசியார்)
(5) ஜேர்மானிய திருத்தூதரான புனித ஆசிர்வாதப்பர்

**19.** சிலுவைப் போர் ஆரம்பிக்கப்பட்டமைக்கான காரணமாக அமைந்தது,
(1) இஸ்லாமிய பக்தர்கள் சிலுவையினை அவமதித்தமையாகும்.
(2) இஸ்லாமிய இராணுவத்தினர் ஐரோப்பா மீது படையெடுத்தமையாகும்.
(3) புனித நாட்டினை துருக்கிய முஸ்லிம்களிடமிருந்து மீட்டெடுத்தமையாகும்.
(4) கொன்ஸ்தாந்திநோபிளைக் கைப்பற்றுவதனை இஸ்லாமிய படையினர் தடுத்தமையாகும்.
(5) உரோமைப் பேரரசாட்சி மேலும் விஸ்தரிக்கப்பட்டமையாகும்.

**20.** துறவற வாழ்வைக் கட்டியெழுப்புவதற்குப் பங்களிப்புச் செய்த மூவரைக் கொண்ட தொகுதி யாது ?
(1) புனித அத்தனாசியார், புனித ஹிப்போ அகுஸ்தீன், புனித ஆசீர்வாதப்பர்
(2) புனித ஹிப்போ அகுஸ்தீன், புனித பக்கோமியஸ், புனித பசில்
(3) புனித ஆசீர்வாதப்பர், புனித எகிப்து அந்தோனியார், புனித ஹிப்போ அகுஸ்தீன்
(4) புனித அத்தனாசியார், புனித பக்கோமியஸ், புனித பசில்
(5) புனித ஆசீர்வாதப்பர், புனித எகிப்து அந்தோனியார், புனித பசில்

**21.** குளுணி துறவு முறைமையில் உருவான பிரசித்திபெற்ற மூன்று பிரதான நபர்கள்
(1) புனித ஆசீர்வாதப்பர், புனித பேர்னாட், புனித பத்திரிசியார்
(2) புனித பேர்னாட், புனித ஹியு, புனித பசில்
(3) புனித ஹியு, புனித றொமோல்ட், புனித பேதுரு தமியான்
(4) புனித றொமோல்ட், புனித பத்திரிசியார், புனித கொலம்பான்
(5) புனித பேதுரு தமியான், புனித கொலம்பான், புனித கிரகோரியார்

**22.** 1850 தொடக்கம் 1900 வரையான காலப்பகுதியில் ஐரோப்பாவிலிருந்து இலங்கைக்குப் பணியாற்ற வந்த பெண்கள் துறவற சபையினர்
(1) திருக்குடும்பக் கன்னியர், அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர், திருச்சிலுவைக் கன்னியர்
(2) நல்லாயன் கன்னியர், இறை பராமரிப்புக் கன்னியர், டொமினிக்கன் கன்னியர்
(3) பிரான்சிஸ்கன் கன்னியர், திருக்குடும்பக் கன்னியர், திருச்சிலுவைக் கன்னியர்
(4) திருக்குடும்பக் கன்னியர், நல்லாயன் கன்னியர், பிரான்சிஸ்கன் கன்னியர்
(5) அன்பின் கன்னியர், அப்போஸ்தலிக்க கார்மேல் கன்னியர், இறை பராமரிப்புக் கன்னியர்

**23.** மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்காகப் பணியாற்றிய மூவரை உள்ளடக்கிய தொகுதி யாது ?
(1) ஆயர் லியோ நாணாயக்கார, ஆயர் எட்மண்ட பீரிஸ், அருட்பணி மைக்கல் றொட்றிகோ
(2) அருட்பணி திஸ்ச பாலசூரிய, சுவாமி ஞானப்பிரகாசர், எவ்வுலின் கனி
(3) ஆயர் லியோ நாணாயக்கார, அருட்பணி பீற்றர்பிள்ளை, அருட்பணி டொன் பீற்றர்
(4) ஆயர் லியோ நாணாயக்கார, ஆயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க, அருட்பணி மைக்கல் றொட்றிகோ
(5) ஆயர் லக்ஷ்மன் விக்கிரமசிங்க, அருட்பணி பீற்றர்பிள்ளை, அருட்பணி டொன் பீற்றர்

**24.** போர்த்துக்கேயர் காலத்தில் சிங்கள இலக்கண நூல்களை எழுதிய குருக்கள் இருவரும் யாவர் ?
(1) எம்மானுவேல் கொஸ்தா, பியரே பேர்குவின்
(2) எம்மானுவேல் கொஸ்தா, அந்தோனியோ பெக்ஷோகோ
(3) பியரே பேர்குவின், யாக்கோமே கொன்சால்வேஸ்
(4) யாக்கோமே கொன்சால்வேஸ், அந்தோனியோ பெக்ஷோகோ
(5) செபஸ்தியன் பொன்ஷோ, பியரே பேர்குவின்

**25.** பிரித்தானியர் காலத்தில் வெளியிடப்பட்ட இரண்டு தமிழ் கிறிஸ்தவ பத்திரிகைகள்
(1) பாதுகாவலன், ஞானப்பள்ளு
(2) உதயதாரகை, சந்தியோகு மாயோர் அம்மானை
(3) ஞானப்பள்ளு, நாலுவேதம்
(4) உதயதாரகை, பாதுகாவலன்
(5) சந்தியோகு மாயோர் அம்மானை, நாலுவேதம்

**26.** இங்கிலாந்தில் VIII ஆம் ஹென்றி மன்னனால் சிரச்சேதம் செய்யப்பட்ட கத்தோலிக்க சட்டத்தரணி
(1) தோமஸ் கிரேன்மர்
(2) தோமஸ் பில்னி
(3) வில்லியம் றின்டேல்
(4) தோமஸ் வில்லியம்
(5) தோமஸ் மூர்

**27.** வில்லியம் கேரி இணைந்துகொண்ட புரட்டஸ்தாந்து திருச்சபை
(1) மெதடிஸ்த திருச்சபை
(2) அங்கிலிக்கன் திருச்சபை
(3) தென் இந்திய திருச்சபை
(4) பப்ரிஸ்ட் திருச்சபை
(5) லூத்தரன் திருச்சபை

**28.** இயேசு சபையினை நிறுவியவர்
(1) புனித லொயோலா இஞ்ஞாசியார்
(2) புனித பிரான்சிஸ் (சேவியர்) சவேரியார்
(3) புனித சிலுவை யோவான்
(4) புனித பிரான்சிஸ்கு அசிசியார்
(5) புனித பேதுரு தமியான்

**29.** கிறிஸ்தவ ஒன்றிப்பு வாரத்தை ஆரம்பித்து வைத்தவர்
(1) வில்லியம் கேரி
(2) கர்தினால் பெயா
(3) திருத்தந்தை 23 ஆம் அருளப்பர்
(4) திருத்தந்தை 6 ஆம் பவுல்
(5) போல் வட்சன்

**30.** சமூக முன்னேற்றம் தொடர்பாகக் கருத்துரைக்கும் இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடு எது ?
(1) கிறிஸ்தவமல்லா மறைகளுடன் திருச்சபைக்குள்ள தொடர்பு பற்றிய ஏடு - நொஸ்ட்ரா ஐடாட்டே
(2) இன்றைய உலகில் திருச்சபை பற்றிய ஏடு - கௌடியும் ஏட் ஸ்பேஸ்
(3) திருச்சபை பற்றிய ஏடு - லூமென் ஜென்சியும்
(4) சமய சுதந்திரம் பற்றிய ஏடு - டிக்னிடாடிஸ் ஹுமானே
(5) இறை வெளிப்பாடு பற்றி ஏடு - டெய் வர்பும்

**31.** இரண்டாம் வத்திக்கான் சங்கக் காலப்பகுதியில் பொதுநிலையினருக்கு முன்னுரிமையளித்த இறையியலாளர்
(1) கார்ள் றானர்
(2) கர்தினால் பெயா
(3) ஈவ்ஸ் கொங்கார்
(4) கர்தினால் யோசப் ரட்சிங்கர்
(5) திருத்தந்தை XXIII ஆம் அருளப்பர்

**32.** திருவிவிலியத்தின் 'வுல்கத்தா' அல்லது 'வல்கேற்' என்ற இலத்தீன் மொழிப்பெயர்ப்பைச் செய்தவர்
(1) புனித பசில்
(2) புனித அகுஸ்தீன்
(3) புனித ஜஸ்ரின்
(4) புனித அத்தனாசியார்
(5) புனித ஜெரோம்

**33.** கிறிஸ்தவ துறவற வாழ்வு ஆரம்பித்த இரண்டு நாடுகளும் யாவை ?
(1) எகிப்து, சிரியா
(2) சிரியா, பாலஸ்தீனம்
(3) எகிப்து, மசதோனியா
(4) பாலஸ்தீனம், பாரசீகம்
(5) சிரியா, கொன்ஸ்தாந்திநோபிள்

**34.** புராதன உடன்படிக்கையில் **குறிப்பிடப்படாத** பகுதி
(1) வரலாற்றுரீதியான முன்னுரை
(2) பேரரசரின் அல்லது முடிக்குரிய மன்னனின் வரலாற்றுரீதியான நற்செயலொன்றை விபரித்தல்
(3) உடன்படிக்கைக்குக் கட்டுப்படுபவரின் பொறுப்புக்களை விளக்குதல்
(4) கடவுளர்களின் பட்டியலை உள்ளடக்குதல்
(5) உடன்படிக்கையின் கால எல்லையைக் குறிப்பிடுதல்

**35.** இஸ்ரயேலில் முடியாட்சி தோன்றியமைக்கான காரணம் **அல்லாதது**
(1) நீதித்தலைவர்களின் செயற்திறன் அற்ற தன்மை
(2) ஆலய வழிபாட்டு மரபு மேற்பார்வை செய்யப்பட்டமை
(3) தேசிய அடையாளம் உறுதிப்படுத்தப்பட்டமை
(4) ஆயுதப் படையினருக்குத் தலைமைத்துவம் வழங்கப்பட்டமை
(5) சூழவுள்ள அனைத்து நாடுகளும் அரசர்களால் ஆளப்பட்டமை

**36.** வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய பின்வரும் விடயங்களுள் சரியானவற்றைத் தெரிவுசெய்க.
A - போர்த்துக்கேயர் கொழும்பில் வியாபாரக் களஞ்சியத்தையும் தேவாலயத்தையும் அமைத்தனர்.
B - போர்த்துக்கேயர் தாம் அமைத்த ஆலயத்தை புனித லோரன்சிற்கு அர்ப்பணித்தனர்.
C - மாயாதுன்னை சீத்தவாக்கைப் பகுதியை ஆட்சி செய்தான்.
D - தர்மபாலனைத் தனக்குப் பின் ஆட்சிபீடமேற்ற மாயதுன்னை போர்த்துக்கேயரின் உதவியை நாடினான்.
E - VII ஆம் புவனேகபாகு மன்னன் தனது மக்கள் கிறிஸ்தவத்தைத் தழுவுவதை ஊக்குவித்தான்.
(1) A யும் D யும் (2) A யும் E யும் (3) B யும் C யும் (4) B யும் D யும் (5) C யும் D யும்

37. பின்வரும் நூல்களுள் சிலுவை யோவான் எழுதிய நூல்கள்

A - அன்பின் உயிருள்ள சுவாலை - The Living Flame of Love
B - ஆன்மீகக் கீதம் - The Spiritual Canticle
C - கார்மேல் மலை ஏற்றம் - Ascent of Mount Carmel
D - அடிப்படைகள் - The Foundation
E - உள்ளக அரண்மனை - Interior Castle

(1) A, B, C (2) A, B, E (3) A, D, E (4) B, C, D (5) C, D, E

38. இலங்கை மெதடிஸ்ட் சபையினரின் பணிகளுடன் **தொடர்பற்ற** விடயம்

(1) கல்விச் சேவை
(2) சுகாதாரச் சேவை
(3) அனாதை இல்லங்கள் அமைத்தல்
(4) பின்தங்கிய பிரதேசங்களை அபிவிருத்தி செய்தல்
(5) மன்னார் பகுதியில் பெரும் பணிகளை மேற்கொள்ளல்

39. இலங்கையில் பிரித்தானிய கவர்னரான தோமஸ் மெயிட்லண்ட் ஆற்றிய முக்கிய பணி

(1) முழு இலங்கையிலும் பாடசாலைகளை அமைத்தமை
(2) சமயச் சுதந்திரத்தினை ஏற்படுத்தியமை
(3) இலங்கையின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றியமை
(4) சமயத்தைப் பரவலடையச் செய்வதற்காக வெளிநாட்டு மறைதூதுக் குழுவினரை அழைத்தமை
(5) கட்டாய முறைசார் கல்வியை நடைமுறைப்படுத்தியமை

40. அலெக்சாந்திரிய இறையியல் கல்லூரி பற்றிய **தவறான** கூற்று எது ?

(1) கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கு மேலாக மனிதத் தன்மைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.
(2) படிப்பினைகளில் பிளேட்டோவின் தத்துவவியல் பயன்படுத்தப்பட்டுள்ளது.
(3) கிறிஸ்துவவியலை விளக்குவதற்காக யோவான் நற்செய்தி பயன்படுத்தப்பட்டுள்ளது.
(4) திருவிவிலிய விளக்கங்கள் உருவக விளக்க முறையில் முன்வைக்கப்பட்டுள்ளன.
(5) திருவிவிலியத்தை விளக்கும்போது வரலாற்று நிகழ்வுகளை விட இலக்கணத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது.

41. கீழ்வருவனவற்றுள் புனித பசிலால் அறிமுகப்படுத்தப்பட்ட துறவற மட வாழ்வின் ஒழுங்கில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை மாத்திரம் கொண்ட தெரிவு யாது ?

A - துறவிகள் ஒரே இல்லத்தில் வாழ வேண்டும்.
B - துறவிகள் ஒரே ஒழுங்கின் கீழ் வாழ வேண்டும்.
C - துறவிகள் உடல் உழைப்பைப் பயன்படுத்தி உழைக்க வேண்டும்.
D - துறவிகள் தங்களது பணிக்கேற்றவாறும் தாம் விரும்பியவாறும் தங்களது தனியான அறைகளில் செபிப்பதற்கான சுதந்திரம் உண்டு.
E - வாரத்திற்கு இரு தடவைகள் அனைத்து துறவிகளும் ஓரிடத்தில் ஒன்றிணைந்து தம்து அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள வேண்டும்.

(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) B, C, D (5) B, C, E

42. இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படும் சமூக, நலன்புரிச் சேவைகளில் தம்மை அர்ப்பணித்த மூன்று கிறிஸ்தவ நிறுவனங்கள்

(1) இலங்கை கரித்தாஸ் - செடேக், புனித வின்சன்ட் டீ பவுல் சபை, கிறிஸ்தவ வாலிபர் சங்கம்
(2) கிறிஸ்தவ வாலிபர் சங்கம், மரியாயின் சேனை, புனித வின்சன்ட் டீ பவுல் சபை
(3) திரு இருதயச் சபை, கிறிஸ்தவ மாதர் சங்கம், இலங்கை கரித்தாஸ் - செடேக்
(4) புனித வின்சன்ட் டீ பவுல் சபை, மரியாயின் சேனை, திரு இருதயச் சபை
(5) இலங்கை கரித்தாஸ் - செடேக், திருப்பாலர் சபை, கிறிஸ்தவ தொழிலாளர் அமைப்பு

43. பின்வருவனவற்றுள் கல்வி, உரையாடல், சமூக சேவை ஆகியவற்றை முன்னெடுப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் இலங்கை கிறிஸ்தவ அமைப்புகள் மூன்றைக் கொண்ட தெரிவு யாது ?

A - துலன நிலையம்
B - சுபோதி ஒருங்கிணைக்கப்பட்ட கல்வி நிறுவனம்
C - இலங்கை கரித்தாஸ் - செடேக்
D - சமூகத்திற்கும் சமயத்திற்குமான நிறுவனம் (CSR)
E - கத்தோலிக்க எழுத்தாளர் ஒன்றியம்

(1) A, B, D (2) A, B, E (3) A, C, D (4) B, C, D (5) B, D, E

**44.** மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் திருச்சபை பின்வருவனவற்றுள் எக்காரணிகளை அடிப்படையாகக் கொண்டு செயற்பட வேண்டும் ?

A - மனிதன், கடவுளின் சாயலாகவும் பாவனையாகவும் படைக்கப்பட்ட உன்னத படைப்பாகும்.
B - கடவுளே மனித வடிவம் எடுத்து மனித மாண்பினை உறுதிப்படுத்தினார்.
C - பூமியில் மனித வர்க்கம் அற்றுப்போகுமாயின், உலகத்தின் நலன்களைக் கவனித்துக்கொள்ள யாரும் இருக்கமாட்டார்கள்.
D - மனிதனுக்குரிய மதிப்பைப் பாதுகாத்தலும் நீதியை நிலைநாட்டுதலும்
E - மனிதரிடம், ஏனைய விலங்குகளிடம் இல்லாத அறிவும் சுதந்திரமும் காணப்படுகின்றமை

(1) A, B, C (2) A, B, D (3) A, B, E (4) A, D, E (5) B, C, D

**45.** பின்வரும் விடயங்களைக் கவனத்திற் கொள்க.

A - போர்த்துக்கேயர் காலத்தில் இலங்கையில் வைத்தியசாலைகள் காணப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.
B - மத வேறுபாடுகளின்றி அனைவருக்கும் சிகிச்சையளித்த இரண்டு வைத்தியசாலைகள் மிஷனரிகளால் (மறைபரப்பாளர்கள்) மன்னாரில் அமைக்கப்பட்டன.
C - தொற்றுநோய் பற்றிய அச்சம் காரணமாக மறைபரப்பாளர்கள் பெரும்பாலான வைத்தியசாலைகளை மூட வேண்டியதாயிற்று.
D - புனித யோசப் வாஸ் கண்டியில் ஏற்பட்ட சின்னம்மை (வைரஸ்) நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் பணிபுரிந்தார்.
E - தொற்றுநோயின் பெருக்கத்தின் காரணமாக மறைபரப்பாளர்கள் இலங்கை வருவதற்கு அச்சம் கொண்டார்கள்.

இவற்றுள் வெளிநாட்டவர் ஆட்சியின்போது இலங்கையின் சுகாதாரச் சேவைகள் பற்றிய சரியான கூற்றுகள் யாவை ?

(1) A, B, C (2) A, B, D (3) B, C, D (4) B, D, E (5) C, D, E

**46.** இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் இரு திருத்தந்தையர்கள்

(1) 12ஆம் பத்திநாதர், 23ஆம் அருளப்பர்
(2) 23ஆம் அருளப்பர், Iஆம் யோண் - பவுல்
(3) 6ஆம் சின்னப்பர், Iஆம் யோண் - பவுல்
(4) 6ஆம் சின்னப்பர், IIஆம் யோண் - பவுல்
(5) 23ஆம் அருளப்பர், 6ஆம் சின்னப்பர்

**47.** பின்வருவனவற்றுள் ஆயர் எட்மண்ட் பீரிஸ் உடன் **தொடர்பற்ற** கூற்று யாது ?

(1) அவர் முதலாவது சிங்கள ஆயராவார்.
(2) உள்நாட்டு திருச்சபையொன்றைக் கட்டியெழுப்புவதில் அவர் அதிகமாக உழைத்தார்.
(3) அவர் இறையியல், மெய்யியல் பேராசனாவார்.
(4) அவர் இலண்டன் பல்கலைக்கழகத்தில் மேற்கத்தைய மொழிகளில் நிபுணத்துவம் பெற்றார்.
(5) திருவழிபாட்டில் அதிக ஆர்வம் காட்டியதுடன் சிங்கள மொழியில் பாடல்களையும் இயற்றினார்.

**48.** பின்வருவனவற்றுள் டான்டே அலிசியேரி உடன் **தொடர்பற்ற** கூற்று யாது ?

(1) இத்தாலியிலுள்ள புளோரன்ஸ் நகரில் பிறந்தார்.
(2) கிறிஸ்தவ இலக்கியத்தை வளர்ப்பதில் பெரும் பங்களிப்புச் செய்தார்.
(3) கிரேக்க மொழியில் எழுதப்பட்ட புத்தகங்களை இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தார்.
(4) தனது தாய்மொழியாகிய இத்தாலிய மொழியில் இலக்கியங்களையும் பாடல்களையும் எழுதினார்.
(5) 'டிவைன் கொமடி' எனும் இலக்கியம் அவரது சிறந்த படைப்பாகக் கருதப்படுகிறது.

**49.** ஜோன் கல்வின் இனால் எழுதப்பட்ட 'கிறிஸ்தவ மதக் கோட்பாடுகள்' எனும் நூலில் **உள்ளடக்கப்படாத** விடயங்களைக் கொண்ட தொகுதி யாது ?

(1) படைத்தவரான இறைவன், கிறிஸ்துவில் இறைவன் வழங்கும் மீட்பு, பரிசுத்த ஆவி, திருச்சபை
(2) படைத்தவரான இறைவன், கிறிஸ்துவில் இறைவன் வழங்கும் மீட்பு, விண்ணக வாழ்வு, நரகம்
(3) படைத்தவரான இறைவன், திரித்துவம், கிறிஸ்துவின் இயல்புகள், பரிசுத்த ஆவி
(4) திரித்துவம், பரிசுத்த ஆவி, திருச்சபை, நரகம்
(5) கிறிஸ்துவில் இறைவன் வழங்கும் மீட்பு, கிறிஸ்துவின் இயல்புகள், புனிதர் வணக்கம், மரியாள்

**50.** இந்தியாவுக்குக் கிறிஸ்தவத்தைக் கொண்டுவந்தவராகக் கருதப்படுகின்ற திருத்தூதர் யார் ?

(1) திருத்தூதர் பிலிப்பு (2) திருத்தூதர் பர்த்தலோமியுஸ்
(3) திருத்தூதர் யூதா ததேயு (4) திருத்தூதர் தோமா
(5) திருத்தூதர் அந்திரேயா

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

## අ.පො.ස. (උ.පෙළ) විභාගය/ க.பொ.த. (உயர் தர)ப் பரீட்சை - 2018

විෂයය අංකය / பாட இலக்கம்: **49**

විෂයය / பாடம்: **கிறிஸ்தவ நாகரிகம்**

## ලකුණු දීමේ පටිපාටිය/புள்ளி வழங்கும் திட்டம்

### I පත්‍රය/பத்திரம் I

| ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. | ප්‍රශ්න අංකය வினா இல. | පිළිතුරු අංකය விடை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01. | 2 | 11. | 3 | 21. | 3 | 31. | 3 | 41. | 1 |
| 02. | 5 | 12. | 5 | 22. | 4 | 32. | 5 | 42. | 1 |
| 03. | 3 | 13. | 4 | 23. | 4 | 33. | 1 | 43. | ALL |
| 04. | 1 | 14. | 4 | 24. | 1 | 34. | 5 | 44. | 2 |
| 05. | 2 | 15. | 2 | 25. | 4 | 35. | 2 | 45. | 2 |
| 06. | 3 | 16. | 4 | 26. | 5 | 36. | 3 | 46. | 5 |
| 07. | 1 | 17. | 1 | 27. | 4 | 37. | 1 | 47. | 3 |
| 08. | 4 | 18. | 4 | 28. | 1 | 38. | 5 | 48. | 3 |
| 09. | 5 | 19. | 3 | 29. | 5 | 39. | 2 | 49. | 5 |
| 10. | 3 | 20. | 4 | 30. | 2 | 40. | 1 | 50. | 4 |

✪ විශේෂ උපදෙස්/ விசேட அறிவுறுத்தல் :

එක් පිළිතුරකට/ ஒரு சரியான விடைக்கு 02 ලකුණු බැගින්/புள்ளி வீதம்

මුළු ලකුණු/மொத்தப் புள்ளிகள் 2 × 50 = 100

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் Sri Lanka Department of Examinations, Sri Lanka Department of Examinations

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2018 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2018 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2018

ක්‍රිස්තියානි ශිෂ්ටාචාරය II
கிறிஸ்தவ நாகரிகம் II
Christian Civilization II

49 T II

07.08.2018 / 08.30 - 11.40

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
*Three hours*

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

* பகுதி I இல் எவையேனும் இரண்டு வினாக்களையும், பகுதி II இல் எவையேனும் மூன்று வினாக்களையும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.
* ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் உரித்தாகும்.

## பகுதி I

**1.** (i) புனித ஜஸ்ரின் பற்றிய நான்கு விடயங்கள் எழுதுக.

(ii) கிரேக்க திருச்சபைத் தந்தையர் இருவரையும் இலத்தீன் திருச்சபைத் தந்தையர் இருவரையும் பெயரிடுக.

(iii) தொடக்கத் திருச்சபையின் இறையியல் வளர்ச்சிக்கு திருச்சபைத் தந்தையர்கள் ஆற்றிய நான்கு பணிகளைக் குறிப்பிடுக.

(iv) ஆரம்ப கால ஆச்சிரம வாழ்வின் நான்கு பண்புகளைத் தருக.

(v) வனத்துத் தந்தையர்களின் வாழ்வில் காணப்பட்ட நான்கு விசேட பண்புகளைக் குறிப்பிடுக.

**2.** (i) மத்திய கால திருச்சபையின் நான்கு பண்புகளைத் தருக.

(ii) மத்திய கால திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சமயப் பின்னணிகள் நான்கினைக் குறிப்பிடுக.

(iii) குளுனி துறவு முறையில் காணப்பட்ட நான்கு ஆன்மீகப் பண்புகளை எழுதுக.

(iv) இரவலர் துறவற சபைகளின் தோற்றத்திற்கான நான்கு காரணங்களைத் தருக.

(v) திருச்சபைக்கும் சமூகத்திற்கும் சிஸ்ரேசியன் துறவிகள் ஆற்றிய நான்கு பணிகளைக் குறிப்பிடுக.

**3.** (i) மத்தியு ரிச்சி அடிகளாரின் மறைத்தூதுப் பணியில் காணப்பட்ட சிறப்பான அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(ii) 18 ஆம், 19 ஆம் நூற்றாண்டுகளில் சீனாவில் திருச்சபை எதிர்நோக்கிய நான்கு சவால்களை எழுதுக.

(iii) புனித பிரான்சிஸ் சவேரியார் காலம் முதல் யாப்பாணில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட நான்கு நடவடிக்கைகளைத் தருக.

(iv) 16 ஆம், 17 ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் போர்த்துக்கேய மிஷனரிமார் எதிர்நோக்கிய சவால்கள் நான்கினைக் குறிப்பிடுக.

(v) இலங்கைக்கு முதன்முதலில் போர்த்துக்கேயர் வருகைதந்தபோது இலங்கையில் காணப்பட்ட இரண்டு இராச்சியங்களையும் முறையே அவற்றின் ஆட்சியாளர்களையும் பெயரிடுக.

## பகுதி II

4. ஒவ்வொரு கிறிஸ்தவரிடமும் நேர்மையான வாழ்வும் தியாகத்துடன்கூடிய அர்ப்பணிப்பும் எதிர்பார்க்கப்படுவதனால் கிறிஸ்தவ சீடத்துவம் சாவல்கள் நிறைந்ததாகும்.
   (i) புனித மத்தேயு நற்செய்தியில் குறிப்பிட்டுள்ளவாறு மலைப்பொழிவின் பேறுகளில் காணப்படும் சவால்மிக்க விடயங்களைக் குறிப்பிடுக.
   (ii) "கிறிஸ்தவ வாழ்வுக்குக் கிறிஸ்துவின் கீழ்ப்படிவு சவால்கள் நிறைந்த எடுத்துக்காட்டாகும்." ஆராய்க.
   (iii) ஆரம்பக் கிறிஸ்தவர்களின் குழும வாழ்வு எவ்வாறு தற்காலக் கிறிஸ்தவக் குழுமங்களுக்குச் சவாலாக அமைந்துள்ளது என்பதை விளக்குக.
   (iv) "கிறிஸ்தவ சீடத்துவ வாழ்வின் சவால்களுக்கு ஆசிர்வாதப்பர் துறவுமடம்சார் வாழ்வு சான்று பகர்கின்றது." ஆராய்க.

5. ஐரோப்பிய பழங்குடியினரின் படிப்படியான மதமாற்றம் திருச்சபையின் வளர்ச்சிக்கு பல வகைகளில் உதவியாயமைந்தது.
   (i) ஐரோப்பிய பழங்குடியினர் படிப்படியாக திருச்சபைக்கு மதம் மாறியமைக்கான காரணங்களை விளக்குக.
   (ii) அயர்லாந்து நாட்டு மக்களைக் கிறிஸ்தவர்களாக்குவதற்குப் புனித பத்திரிசியார் ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.
   (iii) ஒன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய பழங்குடியினர், கிறிஸ்தவத்திற்கு மதம் மாறியமை ஐரோப்பிய சமூகத்தின் வேகமான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த விதத்தை விளக்குக.
   (iv) பேரரசர் பெரிய சாள்ஸ் திருச்சபையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.

6. கிறிஸ்தவப் படிப்பினைகளையும் மதிப்பீடுகளையும் வழங்குவதில் கிறிஸ்தவக் கலைகள் முக்கிய பங்களிப்புச் செய்துள்ளன.
   (i) ஆரம்ப காலக் கிறிஸ்தவச் சித்திரங்கள் கிறிஸ்தவ வழிபாட்டிற்கும் குறியீட்டுத் தொடர்பாடலுக்கும் பங்களிப்பு வழங்கிய விதம் தொடர்பாக விவரிக்குக.
   (ii) உரோமைய பாணியிலான கலைப் படைப்புக்களில் காணத்தக்க விசேட பண்புகளை விளக்குக.
   (iii) பிரஸ்கோ சித்திரங்களில் காணத்தக்க விசேட பண்புகளைக் குறிப்பிடுக.
   (iv) வலுவான முறையில் மறை அறிவை வழங்குவதில் கிறிஸ்தவக் கலையின் தனித்துவமான பங்களிப்புக்களை விளக்குக.

7. ஆங்கிலேயர் ஆட்சியின்போது கிறிஸ்தவம் இலங்கைச் சமூகத்தின் நன்மைக்காக கணிசமான சேவைகளை ஆற்றியுள்ளது.
   (i) இலங்கையின் கல்வி மேம்பாட்டிற்குப் புரட்டஸ்தாந்து மிஷனரிமார் ஆற்றிய பங்களிப்புகளை விளக்குக.
   (ii) ஆங்கிலேயர் ஆட்சியின்போது புரட்டஸ்தாந்து மிஷனரிமார் மேற்கொண்ட மனித நேயப் பணிகளை விவரிக்குக.
   (iii) இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியபோது கத்தோலிக்கர்களுக்கு முகம் கொடுக்க நேரிட்ட சாதக பாதக விளைவுகளை விளக்குக.
   (iv) ஆங்கிலேயர் ஆட்சியின்போது இலங்கைச் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்திய கிறிஸ்தவ விழுமியங்கள் பற்றி விவரிக்குக.

8. திருச்சபையின் படிப்பினைகள் மூலமாகச் சமூகத்தில் அமைதியையும் இணக்கப்பாட்டையும் ஏற்படுத்த முடிந்தது.
   (i) ஆசிய ஆயர்கள் பேரவையின் (FABC) தோற்றம், வளர்ச்சி ஆகியன பற்றி விவரிக்குக.
   (ii) அமைதி, பண்பாடு என்பன தொடர்பில் ஆசிய ஆயர்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்டுள்ள படிப்பினைகளை விளக்குக.
   (iii) உலக கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் (WCC) மூலம் சமாதானம், கிறிஸ்தவ சபைகளுக்கு இடையிலான ஒற்றுமை என்பன தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள படிப்பினைகளை விவரிக்குக.
   (iv) இலங்கைச் சமூகத்தில் காணப்படும் பல்வேறு முரண்பாடுகளுக்கு மத்தியில் சமாதானத்தையும் இணக்கப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் பற்றிய உமது கருத்துகளை விளக்குக.

* * *

# கிறிஸ்தவ நாகரிகம்
## பகுதி II
## அமைப்புக் கட்டுரை I

01. **திருச்சபைத் தந்தையர்களின் வாழ்வு பற்றிய விடயங்களையும், தொடக்ககாலத் திருச்சபையின் இறையியல் வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிய பணிகளையும், வனத்து தந்தையரின் வாழ்வில் துலங்கிய சிறப்பான பண்புகளையும், ஆரம்ப கால ஆச்சிரம வாழ்வில் காணப்பட்ட பண்புகளையும் பற்றிய அறிவை மாணவர்கள் தெளிவுபடுத்துவர்.**

i. **புனித ஜஸ்ரீன் பற்றிய நான்கு விடயங்கள் எழுதுக.**

- கி. பி. 100 - 165 காலப் பகுதியில் வாழ்ந்தார்.
- முதல் கிறிஸ்தவ எழுத்தாளர்
- கிறிஸ்தவத்தின் உண்மைத் தத்துவத்தை முன்வைப்பது இவரது முக்கியபணி.
- இலத்தீன் சபைத் தந்தையர்களில் இவர் முக்கியமானவர்.
- பலஸ்தீனாவில் பிறந்து வளர்ந்த சிறந்த தத்துவ சாஸ்திரி.
- 'அப்பலோஜியா', 'திரைபோவுடன் உரையாடல்' என்பன இவருடைய முக்கியமான நூல்களாகும்.
- அப்பலோஜியாவின் மிகமுக்கியமான விடயமாக யுகரிஸ்த் (Eucharist) வழிபாடு பற்றியதாகும்.
- உரோமையில் கி. பி. 165இல் சிரச்சேதம் செய்யப்பட்டார்.

ii. **கிரேக்க திருச்சபைத் தந்தையர் இருவரையும் இலத்தீன் திருச்சபைத் தந்தையர் இருவரையும் பெயரிடுக.**

| கிரேக்கத் தந்தையர் | இலத்தீன் தந்தையர் |
|---|---|
| புனித அத்தனாசியுஸ் | புனித அம்புறோசியார் |
| புனித கிறிசோஸ்தம் | புனித இலாரியார் |
| புனித பசில் | புனித ஜெரோம் |
| புனித கிரகோரி நாசியன்ஸ் | புனித ஜஸ்ரின் |
| புனித நிஸ்ஸா கிரகோரியார் | புனித பெரிய கிரகோரியார் |
| புனித அந்தியோக்கிய இக்னேசியஸ் | புனித உரோமைய சிறிஸ் |
| புனித அலெக்ஸ்சாந்திரிய சிரில் | புனித தேர்த்தூலியன் |
| புனித இரேனியுஸ் | |
| ஓரிஜன் | |

**iii. தொடக்கத் திருச்சபையின் இறையியல் வளர்ச்சிக்கு திருச்சபைத் தந்தையர்கள் ஆற்றிய நான்கு பணிகளைக் குறிப்பிடுக.**

- கலாபனைக்காரர் முன்பாக கிறிஸ்தவத்தின் உண்மைத் தன்மையினை துணிவுடன் எடுத்துரைத்தனர்.
- பேதகங்களை மறுத்துரைத்து கிறிஸ்தவ மறையுண்மைகளை தெளிவாக போதித்து எழுதினார்கள்.
- இறையியல் கல்லூரிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றினார்கள், உதாரணமாக சிறில், ஒரிஜன், அலெக்ஸ்சாந்திரிய சாந்தப்பர்
- திருச்சபைக்குத் தேவையான இறையியலாளர்களை உருவாக்கினர்.
- கிறிஸ்தவ உண்மைகளுக்கு மெய்யியலின் உதவியுடன் விளக்களமளித்தல்.
- பொதுநிலையினர் ஆன்மீக வாழ்வினை நல்ல முறையில் மேற்கொள்ள உதவியாக பலநூல்களை எழுதினர்.
- திருவிவிலியத்திற்கு விளக்கமளித்தல் மற்றும் கிறிஸ்தவ மறை பற்றியும் தெளிவு படுத்தினர்.
- துறவற வாழ்வின் தோற்றம், வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்தார்.
- துறவற வாழ்வு பற்றியும், துறவிகள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றியும் நூல்கள் எழுதினர்.
- கிறிஸ்தவ இலக்கியம், பாடல்கள் வளர்ச்சிக்கு பங்களிப்பு நல்கினர்.

**iv. ஆரம்ப கால ஆச்சிரம வாழ்வின் நான்கு பண்புகளைத் தருக**

- நீண்ட நேர செபம் (இறைவேண்டல்)
- உழைத்து வேலை செய்தல்
- கீழ்ப்படிதல்
- விரத்தத்துவ வாழ்வு
- குழுவாக செயற்படுதல்
- உபவாச வாழ்வு
- ஒழுக்க வாழ்வு
- ஆழ்தியான வாழ்வு
- தனிமையில் ஏகாந்தத்தில் வாழ்தல்
- அனைத்தையும் பொதுவாக வைத்திருத்தல்

**v. வனத்துத் தந்தையர்களின் வாழ்வில் காணப்பட்ட நான்கு விசேட பண்புகளைக் குறிப்பிடுக.**

- கிறிஸ்துவின் முன்மாதிரிகையைப் பின்பற்றி, தன் ஆன்மீக வாழ்வை செபத்தில், தியானத்தில் வலுப்படுத்தினர்.
- கிறிஸ்துவைப்போல் நோன்பிருந்து வாழ்ந்தனர்
- ஏகாந்த வாழ்வு வாழ்ந்தனர்
- சாதாரண வாழ்வை விட்டு திருமுழுக்கு யோவானைப் போல செபத்தில், தவ வாழ்வில் வாழ்ந்தனர்.
- இறைவார்த்தையை ஆழ்ந்து தியானித்தனர்
- தம் சுகபோகங்களைத் துறந்து தவவாழ்வு வாழ்ந்தனர்
- கனமான உடையணிந்தனர்.
- ஏகாந்தத்தில் சட்ட ஒழுங்கு விதிகட்கு உட்பட்டு வாழ்ந்தனர்.
- தனிமையான இடங்களைத் தேடிச்சென்று வாழ்ந்தனர்.

02. **மத்தியகாலத் திருச்சபையின் நிலைமைகளையும், மத்திய காலத்தில் திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்த சமயப் பின்னணியையும், குளுணி துறவற முறையின் ஆன்மீகப் பண்புகளையும், இரவலர் சபைகளின் தோற்றத்திற்கான காரணங்களையும், திருச்சபைக்கும், சமூகத்துக்குமாக சிஸ்ரேசியன் துறவிகளால் ஆற்றப்பட்ட பணிகளையும் பற்றிய அறிவை மாணவர்கள் குறிப்பாகவும், தெளிவாகவும் எடுத்துரைப்பர்.**

i. **மத்திய கால திருச்சபையின் நான்கு பண்புகளைத் தருக.**

- உலக ஆட்சி, திருச்சபையின் ஆட்சி என்ற இரு ஆட்சிகள் காணப்பட்டமை.
- திருச்சபைத் தலைவர்கள் சமய விடயங்களில் மட்டுமன்றி நிர்வாகச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர்.
- கிராமப் புறங்களில் வாழ்ந்தவர்களுக்கு போதிய மறையறிவு இருக்கவில்லை.
- கல்வியறிவற்ற குருக்களால் மக்களுக்கு போதிய ஆன்மீக வழிகாட்டல்கள் வழங்கப்படவில்லை.
- அரசியல் ( உலகியல் ), திருச்சபைத் தலைவஉகளை நியமிப்பதில் இருபகுதியினரும், மற்றப் பகுதியினரை தமக்குச் சாதமாகப் பயன்படுத்தியமை
- இரவலர் சபைகள் தோற்றம் பெற்றமை
- அளவுக்கதிமான வரிகள் அறவிடப்பட்டமை
- திருச்சபை தன்னைப் புதுப்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது
- சிலுவைப்போர் மூலமாக இஸ்லாமியரின் வெறுப்பைச் சம்பாதித்தமை

ii. **மத்திய கால திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட சமயப் பின்னணிகள் நான்கினைக் குறிப்பிடுக.**

- கத்தோலிக்க திருச்சபை, உரோமை பேரரசு என இரு சமூக தாபனங்களால் ஆட்சி செய்யப்பட்டமை
- இவ்விரு தாபனங்களுக்கிடையே ஏற்பட்ட போட்டி பல முரண்பாடுகளுக்கும், யுத்தங்களுக்கும் வழிவகுத்தமை
- ஒரு மறைமாவட்டத்திற்கு ஒன்றிற்கு மேற்பட்ட ஆயர்கள் இருந்தமை.
- இலௌகீக தேவைகளுக்கு திருச்சபை முக்கியத்துவம் கொடுத்தமை
- இருள்சூழ்ந்த இந்த யுகத்தில் சமயபேதம், திருச்சபைப்பேதம், குருக்களின் பிரச்சனைகள் தோற்றம் பெற்றமை
- திருத்தூதர்கள் காலத்திலிருந்த புனித வாழ்வு, பகிர்தல் வாழ்வு குறைவடைந்து ஆடம்பர, சுயநல வாழ்வு திருச்சபைக்குள் (குருக்கள், ஆயர்கள்) வளர்ந்தது
- மக்களிடம் விசுவாச வாழ்வு குறைவடைந்தது
- திருச்சபைக்குள் பிளவுக்கு வழிவகுத்தது
- அறிவு வளர்ச்சியின் விளைவாக திருச்சபையின் விடயங்களை விமர்சிக்கத் தொடங்கியமை.

iii. **குளுணி துறவு முறையில் காணப்பட்ட நான்கு ஆன்மீகப் பண்புகளை எழுதுக.**

- திருச்சபையின் ஆன்மீக வாழ்வில் பல மாற்றங்களை ஏற்படுத்தியமை.
- புனித ஆசீர்வாதப்பரின் சட்ட ஒழுங்குகளை கடினமாக்கி ( ஆரம்பத்தில் இருந்ததுபோல் ) நடைமுறைப்படுத்தியமை.
- பணத்துக்கு திருச்சபையின் பதவிகளைப் பெற்றவர்களைப் பதவி நீக்கம் செய்தமை.
- சங்கங்கள் கூட்டப்பட்டு தவறுகள் நீக்கப்பட தூண்டுதல் (ஊக்குவிப்பு) வழங்கியமை.

- துறவறத்தின் மேன்மையை உலகிற்கு எடுத்துரைத்தமை
- தியாகத்துடன் இறைவாஉத்தைக்குச் சான்று பகர்ந்தனர்
- விரதத்துவ மற்றும் எளிமையான வாழ்வு.
- பல்வேறு இடங்களுக்கும் சென்று மறையினை போதித்தமை.

**iv. இரவலர் துறவற சபைகளின் தோற்றத்திற்கான நான்கு காரணங்களைத் தருக.**

- நகரமயமாக்கல், வர்த்தக தொடர்பாடல், போட்டித்தன்மை காரணமாகத் துறவற வாழ்வில் சீர்கேடுகள் ஏற்பட்டமை
- கிறிஸ்துவின் தூய, ஏழ்மை வாழ்வினை நடைமுறைச் சமுதாயத்தில் செயற்படுத்த முற்பட்டமை
- திருச்சபைத் தலைவர்களின் இலௌகீகப் போக்கும் அதனால் ஆன்மீக வாழ்வு வீழ்ச்சியடைந்தமை
- சிலுவைப் போர்களினால் ஏற்பட்ட பிரச்சனைகளைத் தீர்ப்பதில் ஈடுபட்டமை
- துறவிகள் பணம் சம்பாதிப்போராகவும், சொத்துக்களை சேகரிப்போராகவும் காணப்பட்டமை
- ஏழைகளுக்கு சேவை செய்ய வேண்டுமென்கின்ற நோக்கு
- உலகியல் மதிப்பீடுகளுக்கு மேலாக ஆன்மீக மதிப்பீடுகள் மேலானவையென வாழ்ந்து காட்டல்.
- ஏனையோருக்கு முன்மாதிரிகையாக வாழ்ந்து காட்டுதல்.

**v. திருச்சபைக்கும், சமூகத்திற்கும் சிஸ்ரேசியன் துறவிகள் ஆற்றிய நான்கு பணிகளைக் குறிப்பிடுக.**

- பிரான்ஸ் நாட்டு அரசனுக்கு மறை தொடர்பாக எழுந்த பிரச்சனைக்கு தீர்வுகாண உதவுதல்
- மக்கள் மத்தியில் சென்று அவர்களின் வாழ்க்கைப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தமை
- ஐரோப்பாவில் தொழில்நுட்பம் பரவ உதவியமை
- செபவாழ்வுக்கு முக்கியத்துவம் கொடுத்தமை
- குழும வாழ்வுக்கு சிறப்பிடம் கொடுத்தமை
- ஆசீர்வாதப்பர் மற்றும் குளுணி துறவற சபைகளினதும் சட்ட ஒழுங்குகளை நுணுக்கமாகக் கடைப்பிடித்தல்.
- உடல் உழைப்பில் ஈடுபடல்.
- பல சவால்களுக்கு (புரட்டஸ்தாந்து, பிரான்சிய புரட்சி) முகம்கொடுத்து, விசுவாசத்துக்கு புத்துயிரளிக்கச் செயற்பட்டமை
- ஆன்மீக மறுமலர்ச்சியை ஏற்படுத்தியமை.

**03. சீனாவில் மத்தேயு ரிச்சி அடிகளாரின் மறைத்தூதுப்பணியில் தென்பட்ட சிறப்பம்சங்களையும், 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் சீனாவில் திருச்சபை எதிர்நோக்கிய சவால்களையும், 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் போர்த்துக்கேய மிஷனரிமார் எதிர்நோக்கிய சவால்களையும், போர்த்துக்கேயரின் வருகையின் போது இலங்கையில் அமைந்திருந்த இராச்சியங்களையும், அவற்றின் அரசுத் தலைவர்களையும் பற்றிய அறிவை மாணவர் தெளிவுபடுத்துவர்.**

**i. மத்தியு ரிச்சி அடிகளாரின் மறைத்தூதுப் பணியில் காணப்பட்ட சிறப்பான அம்சங்கள் நான்கினைக் குறிப்பிடுக.**

- சீன நாட்டு அதிகாரிகளிடம் அனுமதிபெற்று மறைபரப்புப் பணியில் ஈடுபட்டார்
- தன்னிடம் வருவோருக்கு அவரால் தயாரிக்கப்பட்ட உலகப் படத்தையும், தொழில்நுட்பக் கருவிகளையும் காண்பித்து அவர்களை மகிழ்வித்து, அவர்களால் கவரப்பட்டு நற்செய்தியினை எடுத்துரைத்தார்
- பௌத்த பிக்குகளைப்போல் காவியுடையணிந்து நற்செய்திப்பணி புரிந்தார்
- கொன்பூசியஸின் சிந்தனையாளராகத் தம்மை அடையாளப்படுத்தி பணியாற்றினார்
- சீன அறிஞர்களின் ஆடைகளையணிந்து சீனப் பழக்கவழக்கங்களைப் பின்பற்றினார்
- வானசாஸ்திரம் தொடர்பான உரைகளை நிகழ்த்தி மக்களைக் கவர்ந்து நற்செய்தியினை எடுத்துரைத்தார்
- சீனமொழியினைக் கற்று மறையைப் போதித்ததோடு, சீனமொழியில் வழிபாடுகளை நடாத்துதல்.
- சீன வழிபாட்டு முறைகளைப் பின்பற்றினார்.
- சீனக் கலாசாரத்தை மதித்து செயற்பட்டு அதன் சில பண்புகளை தம் ஒழுங்குகளில் சேர்த்துக் கொண்டார்.

**ii. 18ஆம், 19ஆம் நூற்றாண்டுகளில் சீனாவில் திருச்சபை எதிர்நோக்கிய நான்கு சவால்களை எழுதுக.**

- கி. பி. 1740இல் திருத்தந்தை 11ஆம் கிளமெந்து சீன முறைகளில் வழிபடுவதற்கு தடைவிதித்தமை
- கி. பி. 1715இல் சீன வழிபாட்டு முறைகளை நிராகரிக்கவும், உரோமையின் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளவும் எல்லாக் குருக்களும் பணிக்கப்பட்டனர்
- கி. பி. 1717இல் வெளிநாட்டவர் கிறிஸ்தவ மறையைப் போதிக்கத் தடை விதிக்கப்பட்டமை
- சீனாவில் மதக்கலவரம் ஏற்பட்டபோது இயேசுசபையினரைத் தவிர ஏனைய மறைத்தூதுவர்கள் நாட்டிலிருந்து வெளியேற்றப் பட்டமை

**iii. புனித பிரான்சீஸ் சவேரியாரின் காலம் முதல் ஜப்பானில் கிறிஸ்தவ சமயத்தைப் பரப்புவதற்கு மேற்கொள்ளப்பட்ட நான்கு நடவடிக்கைகளைத் தருக.**

- புனித பிரான்சீஸ் சவேரியார் ஜப்பானுக்கு சென்று நற்செய்தியைப் போதிக்க தொடங்கியதன் மூலம் முதன்முதலில் அங்கு கத்தோலிக்க மறை பரவத் தொடங்கியது.
- கி. பி. 1856இல் உரோமன் கத்தோலிக்க மறைபரப்பாளர் ரோக்கியோ தீவுகளில் கத்தோலிக்க மறையைப் போதித்து ஆலயங்களை நிறுவி குருக்களை நியமித்தனர்.
- கி. பி. 1872இல் ஜப்பானில் 'நியுயோர்க் கிரிசுவோ தொஸ்வாயி' (Jananese Chruch of Christ) ஆலயம் நிறுவப்பட்டது.
- ஜப்பானில் மிகவுயர்ந்த கல்வித்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.
- தொழில்நுட்பம் தொடர்பான கல்வி வழங்கப்பட்டமை.
- கத்தோலிக்க ஆலயங்களால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகள் பிற்காலத்தில் ஜப்பானிலுள்ள உயர்தர பாடசாலைகளாக பிரசித்திபெற்று பின்னர் உயர்ந்த பல்கலைக் கழகங்களாக மாறின.

**iv. 16ஆம், 17ஆம் நூற்றாண்டுகளில் இலங்கையில் போர்த்துக்கேயர் மிஷனரிமார் எதிர்நோக்கிய சவால்கள் நான்கினைக் குறிப்பிடுக.**

- அறியாத மொழிபேசும் மக்கள் மத்தியில் பணிபுரிதல்
- அரசர்கள் போர்த்துக்கேய மறைபரப்பாளர்களுக்கு ஆதரவு வழங்காமை
- புவனேகபாகு மன்னன் மக்கள் கிறிஸ்தவத்தைப் பின்பற்றுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தமை
- விதியபண்டார கிறிஸ்தவ மறைபரப்பாளர்களை சிறையிலடைத்து கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியமை
- சங்கிலி மன்னன் யாழ்ப்பாண இராச்சியத்தில் கிறிஸ்தவம் பரவுவதை விரும்பாது 700 பேரைக் கொலை செய்தமை
- ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க மதம் தடை செய்யப்பட்டு, மறைபரப்பாளர்கள் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டமை
- மக்களை கட்டாயப்படுத்தி மதம் மாற்றினர்.
- மன்னனுக்கும் திருச்சபைத் தலைவர்களுக்குமிடையே முரண்பாடுகள் ஏற்படத் தொடங்கியமை.

**v. இலங்கைக்கு முதன்முதலில் போர்த்துக்கேயர் வருகைதந்தபோது இலங்கையில் காணப்பட்ட இரண்டு இராச்சியங்களையும் முறையே அவற்றின் ஆட்சியாளர்களையும் பெயரிடுக.**

- 9ஆம் தர்ம பராக்கிரமபாகு (கி.பி. 1489 - 1513) - கோட்டை
- சேனாசம்மத விக்கிரமபாகு (கி.பி. 1469 - 1511) - கண்டி
- பரராஜசேகரன் (கி.பி. 1478 - 1519) - யாழ்ப்பாணம்

# கிறிஸ்தவ நாகரிகம்
## பகுதி – II

**04. கிறிஸ்து இயேசுவின் மலைப்பொழிவுப் போதனை சிறந்த அறநெறிக் கோட்பாடுகளை கொண்டமைந்தாலும் அடிப்படையில் யதார்த்த வாழ்க்கையில் சவால்கள் நிறைந்தவையாகவே அமைந்துள்ளன என்பதை ஏற்று தமது கிறிஸ்தவ வாழ்வில் ஏற்படும் சவால்களை வெற்றிகொண்டு உண்மை சீடத்துவத்தில் வாழும் தன்மையை எடுத்துரைப்பர்.**

**i. புனித மத்தேயு நற்செய்தியில் குறிப்பிட்டுள்ளவாறு மலைப்பொழிவின் பேறுகளில் காணப்படும் சவால்மிக்க விடயங்களைக் குறிப்பிடுக.**

- கிறிஸ்தவ வாழ்வு என்பது சவால்கள் நிறைந்ததொன்றாகும்.
- இயேசு மலைப்பொழிவின் எட்டுப் பேறுகளினூடாக எமக்கு சவால்கள் நிறைந்த கிறிஸ்தவ வாழ்வினை எடுத்துக்காட்டுகின்றார்
- எனினும் அவற்றை பின்பற்றி வரும்போது இலகுவாக இறையாட்சியை உரிமையாக்கிக் கொள்ளமுடியும்
- உதாரணமாக இலௌகீக உலகில் ஏழ்மையான உள்ளம் கொண்டோராய், தூய்மையானவர்களாக, நீதியின் மீது வேட்கை கொண்டோராய் வாழும்போது இறையாட்சியினை உரிமையாக்கிக் கொள்ளமுடியும்
- அவ்வாறே ஏழைகள், கைவிடப்பட்டோர் மட்டில் இரக்கமுடையோராய் செயற்படும் போதும், மற்றவர்களுடன் கனிவாக நடந்துகொள்ளும் போதும், அமைதிக்காக உழைக்கும் போதும் இறையாட்சியினை நிலைநாட்ட முடியும்

**ii. 'கிறிஸ்தவ வாழ்வுக்குக் கிறிஸ்துவின் கீழ்ப்படிவு சவால்கள் நிறைந்த எடுத்துக்காட்டாகும்' ஆராய்க.**

- பிலிப்பியர் 2: 5-11
- கிறிஸ்து தம்மையே வெறுமையாக்கி, மனித உடலை ஏற்றதைப்போல நாமும் எமக்கிருப்பவற்றை இழக்கத் தயாராக வேண்டும்
- சாவை ஏற்கும் அளவிற்கு அதுவும் சிலுவைச் சாவினை ஏற்குமளவிற்கு கீழ்ப்படிந்ததுபோல நாமும் நமது விருப்பு வெறுப்புக்களுக்கு இடமளியாது பிறருக்கு வாழ்வு வழங்க முன்வர வேண்டும்
- தன்னைத் தாழ்த்துவோர் உயர்த்தப்படுவர். அதாவது இயேசு சிலுவைச்சாவு வரை தம்மைத் தாழ்த்தியதால், கடவுளால் உயர்த்தப்பட்டார். அதுபோல நாமும் தம்மைத் தாழ்த்தி பணிபுரிவதால் கிறிஸ்துவின் மாட்சியில் பங்குபெற முடியும்
- இயேசு செல்வராயிருந்தும், நமக்காக ஏழையானார். அவரது ஏழ்மையால் நாம் செல்வராகுமாறு இவ்வாறு செய்தார். அதுபோல நாமும் பிறரின் மீட்புக்காக செயலாற்ற வேண்டும்.
- பாதம் கழுவும் சடங்கின் மூலம் விளக்குதல்
- பொதுவாக கிறிஸ்துவை உதாரணம் காண்பித்து விளக்குதல்.

**iii. ஆரம்பக் கிறிஸ்தவர்களின் குழும வாழ்வ எவ்வாறு தற்காலக் கிறிஸ்தவக் குழுமங்களுக்குச் சவாலாக அமைந்துள்ளது என்பதை விளக்குக.**

- ஆரம்பகாலக்கிறிஸ்தவர்கள் திருத்தூதர்களின்போதனையைக்கேட்பதிலும்,நட்புடன்உறவாடுவதிலும், அப்பத்தைப்பிட்டு உண்பதிலும், செபிப்பதிலும் நிலைத்திருந்ததோடு, தம்மிடமுள்ளவற்றை இல்லாதவர்களோடு பகிர்ந்து ஒரு குழுமமாக ஓற்றுமையாக வாழ்ந்து வந்தனர்.
- இத்தகைய குழும வாழ்வு இன்றைய கிறிஸ்தவர்களுக்கு பெரும் சவாலாக அமைகின்றது. காரணம் இன்றைய உலகின் வேகமான வளர்ச்சியும், நவீன கண்டு பிடிப்புக்களும் கிறிஸ்தவர்களைப் பெரிதும்பாதிப்பதோடு அவர்களின் செப, தூய, பகிஉவு, நட்புறவு வாழ்விற்கு பெரும் சவாலாக அமைகின்றது
- இன்று மனிதத் தேவைகள் அதிகரித்தும் செல்கின்றமையால் தமக்குள்ளவற்றை இல்லாதவர்களோடு பகிர மனமின்றிப் பல கிறிஸ்தவர்கள் வாழ்கின்றனர். சுயநலம் அதிகரித்துக் காணப்படுவதால் ஒவ்வொருவரும் தான், தனது குடும்பம் என்ற வட்டத்திற்குள் நின்றுவாழ முற்படுகின்றனர்
- ஆலய வழிபாடுகளில் கலந்து கொள்வதற்கும், வீடுகளில் ஒன்றுகூடி செபிப்பதற்கும் நேரத்தை ஒதுக்கமுடியாது உலகியல் தேவைகளில் ஈடுபடுகின்றனர்

**iv. "கிறிஸ்தவ சீடத்துவ வாழ்வின் சவால்களுக்கு ஆசீர்வாதப்பர் துறவுமடம்சார் வாழ்வு சான்று பகர்கின்றது" ஆராய்க.**

- கிறிஸ்தவ சீடத்துவ வாழ்வென்பது பெரும் சவால்கள் நிறைந்த வாழ்வாக காணப்படுகின்ற போதிலும் புனித ஆசீர்வாதப்பர் சபையைச் சாஉந்த துறவிகள் கிறிஸ்துவின் போதனைகளையும் வாழ்வு முறைகளையும் தம்வாழ்வில் கடைப்பிடித்து சாட்சிய வாழ்வு வாழ்ந்தனர்
- முன்மாதிரிகையான வாழ்வு
- சீடத்துவ வாழ்வில் சவால்கள் ஏற்படும்பொழுது ஒதுங்கி விடாமல் அமைதியான இடங்களில் சென்று வாழ்ந்தமை
- எல்லா வேலையும் சமமென கருதி வாழ்ந்தமை.
- செபமும், வேலையும் என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தமை
- சபையின் சட்ட ஒழுங்குகளை கடுமையாக கடைப்பிடித்து வாழ்ந்தமை
- இறைவழிபாட்டில் அடங்கும் திருப்புகழ்மாலை செபத்தை செபப் பயிற்சியாகத் திருச்சபைக்கு ஒப்புக்கொடுத்தமை
- மடத்தலைவருக்கு கிழ்ப்படிந்து வாழ்ந்தமை
- அனைத்தையும் பொதுவில் பயன்படுத்துதல், எதையும் உரிமையாக்கிக் கொள்ளாதிருத்தல்
- தரவேறுபாடின்றி அனைவரையும் சமமாக மதித்தல்
- கலாசார செயற்பாடுகளை மதித்தல்

**05. மேற்கு ஐரோப்பிய நாடுகளில் வாழ்ந்த பழங்குடியினரின் ஆன்மீக வாழ்க்கையை மேம்படுத்த புனித பெனடிக்ற் துறவற சபையினரும், கிறிஸ்தவ மறைபரப்பாளர்களும் மேற்கொண்ட அர்ப்பணிப்புள்ள ஆன்மீகப் பணிகளும் கல்வி சார்ந்த சமூகப் பணிகளும் திருச்சபையின் வளர்ச்சிக்கு பெரும்பங்கு வகித்துள்ளன என்பதை தெளிவுபடுத்துவர்.**

**i. ஐரோப்பிய பழங்குடியினர் படிப்படியாக திருச்சபைக்கு மதம் மாறியமைக்கான காரணங்களை விளக்குக.**

- 5ஆம் நூற்றாண்டில் புனித கிறகோரியார் இங்கிலாந்திற்கு நற்செய்தியினை எடுத்துரைக்க புனித அகுஸ்தீனாரையும், நாற்பது துறவியர்களையும் அனுப்பியமை அங்ளோ சாக்சன்ஸ் இனத்தவர் மனம்மாறி கிறிஸ்தவர்களாகக் காரணமாகியது
- பிரான்ஸ் நாட்டு மன்னனும் 3000 படைவீரர்களும் மனம்மாறி கிறிஸ்தவர்களானது அவர்களைத் தொடர்ந்து பிராங்கர் மனம்மாறி கிறிஸ்தவர்களாகக் காரணமாகியது
- புனித பத்திரிசியாரின் மறைப்பணியால் அயர்லாந்து தேச மக்கள் கிறிஸ்தவர்களானமை, புனித பத்திரிசியார் அயர்லாந்து மக்களிடமிருந்து சுதேச குருக்கள், துறவிகளை உருவாக்கியமை
- புனித பொனிபசின் மறைத்தூதுப் பணியினால் ஜேர்மனிய மக்கள் கிறிஸ்தவர்களானமை
- புனித ஆன்ஸ்கார் டென்மார்க், சுவீடன் போன்ற நாடுகளுக்குச் சென்று நற்செய்தியைப் போதித்து அவர்களை கிறிஸ்தவர்களாக்கினர், அத்துடன் டென்மார்க் அரசனும் அவனைச் சார்ந்தவர்களும் கிறிஸ்தவர்களாகினர்
- புனித கொலம்பா ஸ்கொட்லாந்தில் பிக்டு இனத்தவரை மனந்திருப்பி கிறிஸ்தவஉகளாக்கியமை
- முதலாம் ஓலப் மன்னனால் அனுப்பப்பட்ட மறைபரப்பாளர்களின் பணியால் அயர்லாந்து நாட்டு இனத்தவர் கிறிஸ்தவர்களானமை
- புனித ஆசீர்வாதப்பர் துறவற சபையினர் நாகரிகமற்ற மக்களுக்கு கல்வியறிவை வழங்கி, தொழில்புரியக் கற்றுக்கொடுத்து அவர்களை நாகரிகப்படுத்தியமை
- மிலேச்சர்கள் எனக்கருதப்பட்டவர்களை ஆசீர்வாதப்பர் சபையைச் சார்ந்த துறவிகள் கல்வியறிவினை வழங்கி அவர்களை நாகரிகப்படுத்தினர்.

**ii. அயர்லாந்து நாட்டு மக்களைக் கிறிஸ்தவர்களாக்குவதற்குப் புனித பத்திரிசியார் ஆற்றிய பங்களிப்பை மதிப்பிடுக.**

- அயர்லாந்து மக்களே குருக்களாக, துறவிகளாக வரவேண்டும் என்ற கொள்கையை முன்வைத்தவர் புனித பத்திரிசியார்
- தகுதியுடையோரை தெரிவுசெய்து குருத்துவப் பயிற்சி வழங்கியதோடு துறவிகளையும் உருவாக்கியமை
- அயர்லாந்து சிறந்த கத்தோலிக்க நாடெனஅழைக்கப்பட்டமை
- இவருக்குப்பின் பல துறவற மடங்கள், பாடசாலைகள் கட்டப்பட்டமை
- பல நிறுவனங்களும் ஆயிரக்கணக்கான மறைப் போதகர்களுக்கு பயிற்சி அளித்தமையால் உலகெங்கும் சென்று நற்செய்தியை பரப்பியமை

**iii. ஒன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய பழங்குடியினர் கிறிஸ்தவத்திற்கு மதம் மாறியமை ஐரோப்பிய சமூகத்தின் வேகமான வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த விதத்தை விளக்குக.**

- ஒன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பிய பழங்குடியினர் கிறிஸ்தவர்களானமை ஐரோப்பிய சமூகம் பல துறைகளிலும் வேகமாக வளர்ச்சியடைய பேருதவியாக அமைந்தது
- தமக்கிடையே போரிட்டுக் கொண்டிருந்த ஐரோப்பிய பழங்குடியினர் கிறிஸ்தவ மறைபரப்பாளர்களின் பணிகளினால் படிப்படியாக மனம்மாறி கிறிஸ்தவர்களாகிய போது கல்வி, தொழில், கலாசாரம் போன்றவற்றில் முன்னேறத் தொடங்கினர்.
- புனித ஆசீர்வாதப்பர் சபையைச் சார்ந்த துறவிகளின் முன்மாதிரிகையான அர்ப்பண வாழ்வு ஐரோப்பிய பழங்குடியினர் கல்வி, ஒழுக்கம், பொருளாதாரம் எனப் பலவழிகளிலும் முன்னேறத் துணைபுரிந்தது
- துறவிகள் படிப்பறிவற்ற மக்களுக்கு கல்வியறிவை வழங்கி அவர்களை சிறந்த கல்வியறிவுள்ள மக்களாக்கினர். இச்செயற்பாடு ஐரோப்பாவில் பல்கலைக்கழகக் கல்வி வளர்ச்சியடைய காரணமாக அமைந்தது
- ‘ உழைக்க மனமில்லாதவர்கள் உண்ணக்கூடாது’ என்ற பவுலின் வாக்கிற்கொப்ப துறவிகள் கட்டாயம் உழைப்பில் ஈடுபட வேண்டும் எனக் கூறப்பட்டது. அக்காலத்தில் உழைப்பு இழிவான செயலாகக் கருதப்பட்டது. துறவிகள் தாமும் உழைப்பில் ஈடுபட்டு மற்றவர்களையும் உழைக்கத் தூண்டினர். இதனால் ஐரோப்பா விவசாயம், நெசவு, மந்தை வளர்த்தல், கைத்தொழில் என பொருளாதாரத்தில் முன்னேறியது
- துறவிகள் சிறந்த ஒழுக்க வாழ்வை மேற்கொண்டதோடு மக்களையும் அத்தகைய தூய்மையான ஒழக்க வாழ்வுக்கு அழைத்தனர். இதன் மூலம் ஐரோப்பா ஒழுக்கத்திலும் சிறந்து விளங்கியது.
- மேலும் துறவிகள் இலக்கியங்களை உருவாக்கியதோடு விஞ்ஞான தொழில்நுட்ப கண்டு பிடிப்புக்களிலும் ஈடுபட்டனர். இவை பின்னைய ஐரோப்பிய வளர்ச்சிற்கு வித்திடுபவையாக அமைந்தன.

**iv. பேரரசர் பெரிய சாள்ஸ் திருச்சபையின் வளர்ச்சிக்கு ஆற்றிய பணிகள் பற்றிச் சுருக்கமாக விவரிக்குக.**

- பேரரசர் பெரிய சாள்ஸ் மத்தியகாலத் திருச்சபையின் வளர்ச்சிக்கு பங்காற்றிய மிக முக்கியமான ஒருவராகக் கருதப்படுகின்றார். குறிப்பாக அக்காலத்தில் கல்விப் வளர்ச்சியடைய பெரும் பங்காற்றியுள்ளார்.
- திருச்சபையானது தனது மறைபோதகப் பணிக்கு கல்வியை ஒரு சிறந்த ஊடகமாகக் கருதிப் பயன்படுத்தி வந்திருக்கின்றது.
- அந்நிலையில் உரோமைப் பேரரசின் வீழ்ச்சியுடன் ஐரோப்பியக் கல்வியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டது.
- அதனை சீர்செய்யும் நோக்குடன் பேரரசர் பெரிய சாள்ஸ் மன்னன் கி. பி. 800இல் ஆலயங்களிற்கும், மடங்களிற்கும் அருகில் ஒர் ஆரம்பப் பாடசாலையை நிறுவ வேண்டும் எனக் கட்டளையிட்டான். அதனால் ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் பாடசாலைகளும், நூல்நிலையங்களும் ஆரம்பிக்கப்பட்டன.
- இவ்வகையில் வளர்ச்சியடைந்த கதீற்றல் பாடசாலைகள் ஐரோப்பியக் கல்வியின் தலைமைத் தளங்களாயின. அதற்கு திருத்தந்தையர்களின் ஆதரவும் வழங்கப்பட்டது.

**06. கிறிஸ்தவக் கலைகள், கிறிஸ்தவப் படிப்பினைகளையும், சிறந்த மதிப்பீடுகளையும் வழங்குவதுடன் கிறிஸ்தவ வழிபாடுகளுக்கும் குறியீட்டுத் தொடர்பாடலுக்கும் பங்களிப்பு செய்து மறையறிவை வழங்கும் ஊடகங்களாகவும் வளர்ச்சியடைந்துள்ளன என்பதை எடுத்துரைப்பர்.**

**i. ஆரம்பகாலக் கிறிஸ்தவச் சித்திரங்கள் கிறிஸ்தவ வழிபாட்டிற்கும், குறியீட்டுத் தொடர்பாடலுக்கும் பங்களிப்பு வழங்கிய விதம் தொடர்பாக விபரிக்குக.**

- கிறிஸ்தவ படிப்பினைகளையும், மதிப்பீடுகளையும் வழங்குவதில் கிறிஸ்தவக் கலைகள் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளன, குறிப்பாக ஆரம்ப காலக் கிறிஸ்தவ சித்திரங்கள், ஓவியங்கள் கிறிஸ்தவ வழிபாட்டிற்கும், குறியீட்டுத் தொடர்பாடலுக்கும் சிறந்த பங்களிப்பினை வழங்கியுள்ளன.
- கிறிஸ்தவத்தின் தொடக்க காலமென்பது துன்புறுத்தல்கள் நிறைந்த காலமாகும். யூதர்களாலும், உரோமையர்களாலும் கிறிஸ்தவம் எதிர்க்கப்பட்டதன் விளைவாக கிறிஸ்தவர்கள் பெரும் துன்புறுத்தல்களுக்கு உள்ளாகினர்.
- இன்னலுக்குள்ளாகிய திருச்சபைக்கு குறியீட்டுத் தொடர்பாடலானது அத்தியாவசிய தேவையாகக் கருதப்பட்டது.
- இந்நிலையில் கிறிஸ்தவர்கள் நிலச்சுரங்களில் அமைக்கப்பட்ட கல்லறைகளிலும், கிறிஸ்தவர்களின் வீடுகளிலும் மறைவாக வழிபாடுகளை மேற்கொண்டனர். இவ்விடங்களில் கிறிஸ்தவர்கள் மட்டும் விளங்கிக் கொள்ளக்கூடிய விதமாக சில கிறிஸ்தவ அடையாளங்களைப் பயன்படுத்தினர். உதாரணமாக, மீன் - கிறிஸ்துவுக்கும், புறா - ஆன்மாவுக்கும், மயில் - நித்திய வாழ்வுக்கும், கழுத்தில் ஆட்டை வைத்திருக்கும் இளைஞன் - நல்ல ஆயனுக்கும் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்டது.
- கி. பி. 1931இல் அகழ்வாராட்சியின்போது டுரா யுரோபஸ் என்பரின் வீட்டிலும், உரோமையில் அமைக்கப்பட்ட டொமிற்றில்லாவின் கல்லறையிலும் பல சுவர் ஓவியங்கள் காணப்பட்டன. உதாரணமாக, ஆதாம் - ஏவாள், மோசே கற்பாறையில் இருந்து நீரை வரச்செய்தல், யோனா திமிங்கலத்திடமிருந்து காப்பற்றப்படல், தானியேல் சிங்கத்திடமிருந்து பாதுகாக்கப்படல், இயேசுவும் அவருடைய சீடர்களும் போன்ற விவிலியம் சார்ந்த ஓவியங்களைக் குறிப்பிடலாம்.
- எல்லா மதத்தினரும் இலகுவாக கிறிஸ்தவ சமயக் கருத்துக்களை விளங்கிக்கொள்ள முடியும்.
- இவையனைத்தும் கிறிஸ்தவர்களை வழிபாட்டில் அர்த்தமுள்ள வயையியல் ஈடுபடத் தூண்டும் நோக்குடன் படைக்கப்பட்ட குறியீடுகளாகவே இருந்துள்ளன என்பது தெளிவு.

**ii. உரோமைய பாணியிலான கலைப் படைப்புக்களில் காணத்தக்க விசேட பண்புகளை விளக்குக.**

- அகலத்தைவிட நீளம்கூடிய செவ்வக வடிவான கட்டிடங்களைக் கொண்டமைந்தமை.
- ஆலயத்திற்குள் நுழைந்தவுடன் கண்ணுக்குத் தெரிவது அரைவட்ட வடிவான குகையில் அமைந்திருக்கும் பலிப்பீடம்.
- இரண்டு வரிசைகளில் அமைந்துள்ள உயரமான தூண்களில் கூரைகள் அமைக்கப்பட்டுள்ளன.
- சிறகுப் பகுதிக்கும், நடுப்பகுதிக்கும் இடையிலுள்ள தூண்களில் செய்யப்பட்ட சுவர்களிலுள்ள ஜன்னல்கள் வழியாக வெளிச்சம் உள்ளே வருதல்.
- சதுர வடிவான, வட்டமான அகன்ற சுவரும், வட்ட வடிவான, சிலுவை வடிவான ஆலயங்களும் காணப்படுதல்.
- அதிக வளைவுகளைக்கொண்ட கட்டட அமைப்பாகும். சீமேந்து, இரும்பு போன்ற பொருட்கள் அற்ற சூழ்நிலையிலேயே அமைக்கப்பட்ட வளைவுகள் கட்டிடக் கலையின் நுட்பத்தினை பறைசாற்றுகின்றது.

**iii. பிரஸ்கோ சித்திரங்களில் காணத்தக்க விசேட பண்புகளை குறிப்பிடுக.**

- பிரஸ்கோ சித்திரமானது புதிய சுவர்களில் பூச்சு காய்வதற்கு முன் ஓவியம் வரையும் முறையாகும்.
- இதனைக் கண்டுபிடித்தவர் கியோற்றோ டீ பொர்டோனே ஆவார்.
- அவரின் ஓவியங்களில் பிரபல்யமானது புளோறன்ஸ் நகரத்திலுள்ள புனித பிரான்சீஸ் அசிசியாரின் ஆலயச் சுவர்களில் வரையப்பட்ட ஓவியங்களாகும்.
- இவ் ஓவியங்களில் பின்வரும் பண்புகளைக் காணலாம்
- உயிரோட்டமுள்ள மனிதர்
- பின்னணியாக மரங்கள், மலைகள்
- பலவர்ணப் பறவைகள்
- இம்முறையை அறிமுகம் செய்த கியோற்றோ நிகழ்கால சித்திரக்கலையின் தந்தையென அழைக்கப்படுகின்றார்.

**iv. வலுவான முறையில் மறை அறிவை வழங்குவதில் கிறிஸ்தவக் கலையின் தனித்துவமான பங்களிப்புக்களை விளக்குக.**

- கலைகள் பலவகைப்படும். அவையாவன: இலக்கியம், சித்திரம், சிற்பம், கட்டிடம், நாடகம், சங்கீதம் என்பனவாகும்.
- அந்தவகையில் கிறிஸ்தவ இலக்கியமானது மக்களுக்கு கிறிஸ்தவ விசுவாசத்தை அறிவுறுத்தி வளர்க்கின்றது
- உதரணமாக, யாகப்பர் அம்மானை – யாகப்பரது வரலாறு, ஞானப்பள்ளு – திருச்சபை வரலாறு, வியாகுலப் பிரசங்கம் – இயேசுவின் பாடுகளின் வரலாறு, தேம்பாவணி – வளனாரின் வரலாறு.
- மைக்கல் ஆஞ்சலோ வரைந்த உலகப்படைப்பு, நடுத்தீர்வை போன்றவை மக்களால் இலகுவில் விளங்கிக் கொள்ளக்கூடியதாகவும், விவிலிய, இறையியல் அறிவை வழங்குவதாகவும் இருந்தது.
- லியனாடோ டாவின்சி வரைந்த இறுதி இராவுணவில் கிறிஸ்தவ அன்பு வெளிப்படுகின்றது. அத்துடன் நற்கருணை ஏற்படுத்தப்பட்ட முறையும் தெளிவாகின்றது.
- கிறிஸ்தவ இசை வழிபாட்டிற்கு மெருகூட்டியதால் மக்கள் ஆர்வத்துடனும், பக்தியுடனும் செயற்பட்டனர்.
- பாஸ்கு நாடகத்தை மேடையேற்றுவதன் மூலம் கிறிஸ்துவினுடைய பாடுகள், மரணத்தை மக்கள் இலகுவில் புரிந்துகொள்ள சிறந்த ஊடகமாக அமைந்தது.

**07. ஆங்கிலேயர் ஆட்சியின்போது இலங்கையில் பணியாற்றிய புரட்டஸ்தாந்து மிஷனரிமார் கல்வி, மனிதநேயப் பணிகள் மூலம் வழங்கிய பங்களிப்பையும், இலங்கைச் சமூகத்தில் ஏற்படுத்திய கிறிஸ்தவ மதிப்பீடுகளின் செல்வாக்கையும், கத்தோலிக்கர் எதிர்கொண்ட சவால்களையும் தெளிவுபடுத்தவர்.**

**i. இலங்கையின் கல்வி மேம்பாட்டிற்குப் புரட்டஸ்தாந்து மிஷனரிமார் ஆற்றிய பங்களிப்புக்களை விளக்குக.**

- போர்த்துக்கேயர், ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் இலங்கையில் அறிமுகம் செய்யப்பட்ட மேலைத்தேய கல்வி முறையானது ஆங்கிலேயர் காலத்திலும் தொடர்ந்து வளர்ச்சியடைந்து சென்றது. இத்தகைய வளர்ச்சிக்கு புரட்டஸ்தாந்து மிசனறிமார்கள் வழங்கிய பங்களிப்பு குறிப்பிடத்தக்கது.
- இலங்கையை ஆங்கிலேயர் கைப்பற்றி ஆட்சிசெய்யத் தொடங்கியதைத் தொடர்ந்து பல மிசனறிக் குழுக்கள் இங்கு சமயப் பரப்புதலுக்காக வருகை தந்ததோடு, அவர்கள் கிறிஸ்தவ சமயத்தை பரப்ப கல்வியை ஒரு சிறந்த ஊடகமாகப் பயன்படுத்தினர்.
- 1801இல் இலங்கைக்கு வருகைதந்த கிறிஸ்தவ அறிவை வளர்க்கும் சபையினர் யாழ்ப்பாணத்தில் தம் கல்விப் பணியினை முன்னெடுத்தனர்.
- 1912இல் இங்கு வந்த பப்ரிஸ்ட் மிசனறிமார் தமது கல்விப் பணியினை ஆரம்பித்தோடு, கொழும்பில் றோயல் கல்லூரியினை ஆரம்பித்தனர்.
- 1815இல் இங்கு வந்த வெஸ்லியன் மிசனறிக் குழுவினர் கொழும்பில் வெஸ்லியன் மெதடிஸ்த கல்லூரியையும், கண்டியில் கிங்ஸ்வூட் கல்லூரியையும், காலியில் ரிச்மண்ட் கல்லூரியையும் ஆரம்பித்து கல்விப் பணியாற்றினர்.
- அமெரிக்கன் மிசனறிக் குழுவினர் யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டையில் ஒரு பாடசாலையையும், யாழ்நகரில் மத்திய கல்லூரியையும், உடுவிலில் மகளிர் கல்லூரியையும் ஆரம்பித்தனர்.
- ஆங்கிலேயர் காலத்தில் கொழும்பில் ஒரு பாடசாலை ஆணைக்குழுவும், மத்திய பாடசாலை ஆணைக்குழுவென பல ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டது.

**ii. ஆங்கிலேயர் ஆட்சியின்போது புரட்டஸ்தாந்து மிஷனரிமார் மேற்கொண்ட மனித நேயப் பணிகளை விவரிக்குக.**

- ஆங்கிலேயரின் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கு வந்த புரட்டஸ்தாந்து மிசனறிக் குழுவினர் கல்விப்பணி மட்டுமல்லாது பலவிதமான மனிதநேயப் பணிகளிலும் ஈடுபட்டனர். குறிப்பாக மருத்துப்பணி, சமூகநலப்பணி, மனித உரிமைகளுக்காகக் குரல்கொடுத்தல் எனப் பல்வேறுபட்ட பணிகளில் ஈடுபட்டனர்.
- மருத்துவப் பணிகளைப் பொறுத்தவரையில் கிறீன் மருத்துவமனை, மக்லொயிட் மருத்துவமனை என்பனவற்றின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பணிகளைக் குறிப்பிடலாம்.
- அமெரிக்கன் மிசனறியினரால் முதலாவது மருத்துவமனை 1820ஆம் ஆண்டில் பண்டத்தரிப்பில் நிறுவப்பட்டது. சமய வேறுபாடின்றி அனைவருக்கும் கிறீன் மருத்துவப் பணிபுரிந்தார். 1848இல் மானிப்பாயில் மேலும் ஒரு மருத்துவமனை நிறுவப்பட்டது.
- இவ்விளின் கார்ணி அம்மையார் ஆதரவற்ற துன்புறும் மக்களுக்கு ஆதரவளிப்பதற்காக தம்மை அர்ப்பணித்தார்.

- பெண்களுக்கான கல்வியும், சமூக மேம்பாட்டு விருத்தியும், சிறார்களுக்கான மற்றும் மாற்றாற்றல் சிறுவர்களுக்கான உதவிகளும், இல்லங்களையும் அமைத்தல்.
- மனித உரிமைகளுக்கு முக்கியத்துவம் வழங்கினர்.
- ஏழைகள், அநாதைகள், மாற்றாற்றல் உள்ளவர்கள் மட்டில் அதிக கவனம் செலுத்தினர்.

**iii. இலங்கையில் ஆங்கிலேயர் ஆட்சி நிலவியபோது கத்தோலிக்கர்களுக்கு முகம் கொடுக்க நேரிட்ட சாதக பாதக விளைவுகளை விளக்குக.**

**சாதகமான விடயங்கள்:**

- இலங்கையை ஆங்கிலேயர் ஆட்சிசெய்த காலத்தில் கி. பி. 1806இல் ஆளுனராகவிருந்த தோமஸ் மெயிட்லண்ட் மதத் சுதந்திரத்தினை வழங்கினார். இது ஒல்லாந்தர் காலத்தில் தடைசெய்யப்பட்ட கத்தோலிக்க மதம் மீண்டும் சுதந்திரமாகச் செயற்பட வழியினை ஏற்படுத்திக் கொடுத்தது.
- கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் நோக்குடன் இலங்கைக்கு வந்த பல ஆண்களுக்கான, பெண்களுக்கான துறவற சபையினர் பல பாடசாலைகளைக் கட்டி கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டனர்.
- ஆங்கிலமொழிக் கல்வி ஆரம்பிக்கப்பட்டமை.
- பல துறவற சபைகள் நாட்டிற்கு வந்து பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தமை
- ஒரத்தோரியன் சபைக் குருக்கள் நாடு முழுவதும் சென்று பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தமை.
- சாதி, மத பேதம் குறைந்து செல்ல வழிகிடைத்தமை.
- உயர்கல்வி வாய்ப்புக்கள் அதிகரித்தமையும், தொழில் வாய்ப்புக்கள் உருவானமையும்.

**பாதகமான விடயங்கள்:**

- இக்காலத்தில் ஆங்கிலேயருக்கே அனைத்து விடயங்களிலும் முன்னுரிமை வழங்கப்பட்டது. உதாரணமாக பாடசாலை ஆணைக்குழுக்கள் உருவாக்கப்பட்ட போது அங்கிலிக்கன் திருச்சபைக் குருக்களுக்கே இடம் வழங்கப்பட்டது.
- கத்தோலிக்க மதம் உட்பட ஏனைய மதத்தவரின் கல்விச் செயற்பாடுகளுக்கு ஆங்கிலேய அரசு உதவிகளை வழங்கவில்லை.
- ஆங்கிலக்கல்விக்கே முக்கியத்துவம் வழங்கப்பட்டதுடன் சுதேசமொழிக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.
- சமூக அமைப்பில் கற்றோர் / கல்வி பெறாதவர், அந்தஸ்தில் உள்ளோர் / தாழ்ந்தவர் பாகுபாடு உருவானது.
- ஆங்கிலம் தெரிந்தோர் மட்டுமே சமூகத்தில் உயர்நிலையை அடைய முடிந்தது.

**iv. ஆங்கிலேயர் ஆட்சியின்போது இலங்கைச் சமூகத்தில் செல்வாக்குச் செலுத்திய கிறிஸ்தவ விழுமியங்கள் பற்றி விவரிக்குக.**

- மதச்சுதந்திரம் கிடைத்ததால் எம்மதமும் சம்மதம் என்றநிலை உருவாகியமை.
- எல்லோருக்கும் கல்வி கிட்டியமை (ஏழை, செல்வர் என்ற வேறுபாடின்றி).
- வழிபாட்டில் இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டமை.
- சுதேச கலைகளினூடாக சமய, சமூக விழுமியங்கள் ஊக்குவிக்கப்பட்டமை.
- திருமண புனிதத்துவத்திற்கு (ஒருதாரப் பழக்கம்) முக்கியத்துவம் வழங்கப்பட்டமை.
- ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் இரக்கச் செயல்கள் மேற்கொள்ளப்பட்டன.
- கைவிடப்பட்டோர், புத்திசுயாதீனமுற்றோர், அநாதைகள், வழிதவறிச் சென்றோர், துன்புறுவோர் போன்றவர்களுக்கு கூடிய கவனம் அளிக்கப்பட்டது.
- கருணையோடு இவர்களைப் பராமரிக்கும் நிலையங்கள் செயற்படுத்தப்பட்டமை.
- கிராமங்களில், நகரங்களில் ஏழைகளுக்கான புனரமைப்பு நிலையங்கள் செயற்படுத்தப்பட்டமை.
- நோயாளருக்காக வைத்திய நிலையங்கள் ( கிறீன் மருத்துவமனை - மானிப்பாய், மக்லொயிட் மருத்துவமனை - இணுவில்) மாந்தீவு தொழுநோயாளர் மருத்துவமனை ஆரம்பிக்கப்பட்டமை.

**08. ஆசிய ஆயர்கள் பேரவையும், உலக கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனமும் சமூகத்தில் அமைதியையும், இணக்கப்பாட்டையும் ஏற்படுத்துவதற்கு முன்வைத்த படிப்பினைகளையும், இலங்கைச் சமூகத்தில் காணப்படும் பல முரண்பாடுகள் மத்தியிலும் சமாதானத்தையும், இணக்கப்பாட்டையும் ஏற்படுத்துவதற்கான கருத்துக்களையும் முன்வைப்பர்.**

**i. ஆசிய ஆயர்கள் பேரவையின் (FABC) தோற்றம், வளர்ச்சி ஆகியன பற்றி விவரிக்குக.**

- ஆசிய ஆயர் பேரவையானது கத்தோலிக்க ஆயர்களைக் கொண்ட ஓர் தன்னார்வ அமைப்பாகும். 1970ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திருத்தந்தை 6ஆம் சின்னப்பர் ( 6ஆம் பவுல் ) பிலிப்பைன்ஸ் நாட்டின் மணிலா நகருக்கு வருகைதந்தபோது அவரைச் சந்திப்பதற்காக ஆசியாவைச் சேர்ந்த 180 ஆயர்கள் ஒன்று கூடினர். இவ்வொன்று கூடலின்போது ஆசிய ஆயர்கள் மன்றத்தின் கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.
- இச்சந்தர்ப்பத்தில் ஆசிய ஆயர்கள் தம் மேய்ப்புப்பணி அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். ஆசிய திருச்சபையில் பொதுவாகக் காணப்படும் பிரச்சினைகளை இனம்கண்டு அடையாளப்படுத்தினர். ஆசிய மக்களை இணைக்கும், மக்கள் மத்தியில் தொடர்பை வளர்க்கும் பாரம்பரிய இணைப்புக்களையும், கலாசார தாக்கங்களை பற்றிய விழிப்புணர்வையும் பகிர்ந்து கொண்டனர்.
- இதன் விளைவாக ஆசிய ஆயர் பேரவையை நிறுவதற்கான கலந்துரையாடல் 1971ஆம் ஆண்டு மார்ச் மாதம் கொங்கொங் இல் நடைபெற்றது. இவ்வேளை ஆசிய ஆயர் பேரவையின் இயல்பு, நோக்கு, செயற்திட்டம் பற்றிய விடயங்கள் ஆராயப்பட்டன.
- ஆசிய ஆயர் பேரவையானது 1972ஆம் ஆண்டு நவம்பர் மாதம் திருச்சபையால் அதிகார பூர்வமாக வத்திக்கானில் அங்கிகரிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. வளர்ந்த இறைவாக்கினர் தன்மைகள் கொண்ட தூர நோக்கும் ஆயர்களின் ஒருமித்த மனப்பாங்கும் ஆயர் பேரவையின் தோற்றத்திற்கு வித்திட்டது எனலாம்.

- இவ்வமைப்பில் ஆசியாவின் தெற்கு, தென்கிழக்கு, கிழக்கு, மத்திய ஆசியாவென ஆசியாவின் 15 நாடுகளிலுள்ள மறைமாவட்டங்களைச் சார்ந்த ஆயர்கள் அங்கம் பெறுகின்றனர்.
- ஆசிய ஆயர் பேரவையானது தன் உறுப்பினர்கள் மத்தியில் ஒருமைப்பாட்டையும், ஒன்றிப்பையும் பேணிவளர்த்து, கூட்டுப்பொறுப்புணர்வை ஊக்குவித்து ஆசிய சமூகங்களின் மேம்பாட்டிற்காகவும், நலனுக்காகவும் செயல்படும் தனித்துவமான நோக்கைக் கொண்டது.

**ii. அமைதி, பண்பாடு என்பன தொடர்பில் ஆசிய ஆயர்கள் பேரவையினால் முன்வைக்கப்பட்டுள்ள படிப்பினைகளை விளக்குக.**

- இன்றையஉலகில்விரைவாகப் பரவிவரும்உலகமயமாக்குதலால்மக்கள்பல்வேறுபிரச்சினைகளுக்கும், போர்களுக்கும் முகம்கொடுக்க வேண்டியவர்களாக உள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் மக்களின் வாழ்க்கை முறையைக் கட்டியெழுப்ப ஆசியத் திருச்சபை அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டியுள்ளது.
- மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு முகம் கொடுப்பதன் வழியாக நீதியும், சமத்துவமும் உள்ளவொரு சமுதாயத்தை கட்டியெழுப்ப முடியம் என்பதை ஆசிய ஆயர் மன்றம் நம்புகின்றது.
- பல்சமயத்தவர்களுடன் உறவை வளர்ப்பதன் மூலம் அனைவரும் ஒற்றுமையாக, சகோதர சகோதரிகளாக வாழமுடியுமென ஆசிய ஆயர் பேரவை எடுத்தியம்புகின்றது.
- மக்களின் வாழவியற் பிரச்சனைகள் ஆராயப்பட்டு அப்பிரச்சனைகளுக்கு விடை காண்பதன் மூலம் கிறிஸ்தவ வாழ்வு கட்டியெழுப்பட வேண்டும்.
- இறைவன் அமைதியின் இருப்பிடம். மனிதன் தனக்குள்ளே சமாதானத்தின் விதையைக் கொண்டுள்ளான். உண்மையான சமாதானம் இயேசுக்கிறிஸ்துவில் நாம் வைக்கின்ற நம்பிக்கையில் வளர்ந்து வருகின்றது. இந்த சமாதானம் கிறிஸ்தவர்கள் வழியாக அனைவருடனும் பகிர்ந்து கொள்ளப்படவேண்டும்.
- மக்கள் சமூகங்களின் இயற்கையோடு ஒட்டிய வாழ்க்கை, மக்களின் நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் பண்பாட்டிற்குள் அடங்கும். பண்பாடு மனித வாழ்வின் மதிப்பீடுகள் பலவற்றை உள்ளடக்கியுள்ளது.
- ஆசியச் சூழமைவுக்கேற்ப பண்பாட்டு வளங்களைப் பயன்படுத்துவது முக்கியமானது. ஆசிய மக்கள் தமது வளங்களைப் பயன்படுத்துவதிலும் ஆசியச் சூழ்நிலைகளுக்கேற்ப தம்வாழ்க்கை முறையை மாற்றியமைத்துக் கொள்வதும் நிறைவாகக் காணப்படுகின்றது.
- ஆசிய மக்களின் பண்பாட்டு சமய விழுமியங்களினூடாக உறவை வளர்த்து அதன் வழியாக கிறிஸ்துவை அடையவும், பண்பாடுகளின் மையமான கிறிஸ்துவை வெளிப்படுத்தவும் வேண்டும்.

**iii. உலக கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனத்தின் (WCC) மூலம் சமாதானம், கிறிஸ்தவ சபைகளுக்கு இடையிலான ஒற்றுமை என்பன தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள படிப்பினைகளை விவரிக்குக.**

- உலக கிறிஸ்தவ சம்மேளமானது 1948ஆம் ஆண்டு ஆவணி மாதம் 23ஆம் திகதி நெதர்லாந்து நாட்டிலுள்ள அம்ஸ்ரடாம் நகரில் உருவாக்கப்பட்டது. இதன் முதற்கூட்ட அமர்வில் 44 நாடுகளிலுள்ள 147 திருச்சபை அங்கத்தவர்கள் பங்கு கொண்டனர்.
- உலக கிறிஸ்தவ சம்மேளனம் என்பது அங்கத்துவ திருச்சபைகளுக்கு மேலான ஒரு அமைப்போ அல்லது திருச்சபைகள் மீது ஆளுகை செலுத்தும் ஒர் அமைப்போ அல்ல, மாறாக இயேசுகிறிஸ்து தனது ஒரே திருச்சபையிடம் எதிர்பார்த்த ஒருமைப்பாட்டை செயற்படுத்த முயற்சிக்கும் ஒரு தோழமை அமைப்பாகும்.
- இவ்வமைப்பு அமைதி தொடர்பாகக் கூறுகின்றபோது வன்முறைகளின் போது வெறும் பார்வையாளர்களாகவோ அல்லது அதுபற்றி துக்கப்படுவதையோ விடுத்து திருச்சபைக்குள்ளும், வெளியிலும் அமைதி ஏற்படுவதற்காக செயற்பட வேண்டுமெனக் கூறுகின்றது.
- பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைப் பிரயோகம், தேசத்தின் அல்லது இனத்தின் பேரில் மேற்கொள்ளப்படும் வன்முறைகளுக்கு எதிராக துணிந்து குரல்கொடுக்க வேண்டும்.
- அன்பின் சீடராகவும், விடுதலையின் திருத்தொண்டராகவும், அகிம்சை வழிப்போதர்களாவும், ஒப்புரவின் தூதுவர்களாகவும் நாம் இருக்க வேண்டும்.
- திருச்சபை அமைதிக்கும், ஒப்புரவுக்கும் ஒன்றிணைந்து செயற்படத் தவறினால் உலகில் திருச்சபையின் பணி தோல்வியடையும்.
- அங்கத்துவ சபைகள் பிற சபைகளின் திருமுழுக்குத் தகுதியை அங்கீகரிக்க வேண்டும்.

**iv. இலங்கைச் சமூகத்தில் காணப்படும் பல்வேறு முரண்பாடுகளுக்கு மத்தியில் சமாதானத்தையும், இணக்கப்பாட்டையும் ஏற்படுத்துவதற்காக மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகள் பற்றிய உமது கருத்துக்களை விளக்குக.**

- இலங்கைச் சமூதாயமானது நீண்ட காலமாக பல்வேறு முரண்பாடுகள், பிரச்சினைகளைக் கொண்ட ஒரு சமூகமாகவே காணப்படுகின்றது.
- சமாதானத்தையும், இணக்கபாட்டினையும் ஏற்படுத்துவதற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தல்.
- கிறிஸ்தவர்களாக இருசமூகங்களையும் பிரதிபலிப்பதால் மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் செயற்படுதல்.
- இலங்கைச் சமூகத்தில் சமாதானம், இணக்கப்பாடு ஏற்படுத்துவதற்காக இறைவனிடம் செபித்தல்.
- முரண்பாடுகள், பிரச்சனைகளுக்கு உட்பட்டிருக்கும் பிரிவினர்களிடையே மனந்திறந்த பேச்சு வார்த்தைகள், கலந்துரையாடல்களை ஏற்படுத்துதல்.
- வன்முறைகளைக் கைவிட்டு இனவாதம், மதவாதம், வர்க்க பேதங்களை மறந்து சமாதானத்தை, ஒற்றுமையை, ஒருமைப்பாட்டை வளர்க்கும் கருவிகளாய் செயற்படல்.
- சவால்களை எதிர்கொள்ளவும், பயனுள்ள தீர்வுகளை முன்வைக்கவும் தயாராதல்.
- பிரச்சனைகளுக்கு முறையான தீர்வுகளைக்காட்டி, போரின் அனுபவங்கள், ஆலோசனைகளைப் பெறல்.

- நீதி, உண்மை, சமத்துவம், சகோதரத்துவத்துடன் செயற்படும் மத்தியஸ்தத்தை நாடுதல்.
- அன்பின் சீடராக, விடுதலையின் திருத்தொண்டராக அகிம்சை வழியில் செயற்படுவோராக, ஒப்புரவின் தூதுவர்களாக நாம் மாற வேண்டும்.
- பழையதை மறந்து, மன்னித்து, ஏற்று வாழும் மனப்பக்குவத்தை கொண்டிருக்க வேண்டும்.
- பிளவுபட்டுள்ளோரிடையே நல்லிணக்கச் செயற்பாடுகளை ( சுற்றுலாக்கள், விளையாட்டுக்கள், இனச்சந்திப்பு ) மேற்கொள்ளல்.